# DRAVIDIAN READERS



# மூன்றாம்

# திராவிட வாசகம்

... NAIDU & SONS, MAD...

17 JUL 1917

TB
031,6(3)
N17
173459

# மூன்றும்

# திராவிட வாசக புஸ்தகம்

சென்னை - துரைத்தன
மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
**கா. நமச்சிவாய முதலியார்**
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
ரெஜிஸ்தர் செய்தது]    1917    [விலை 4 அணா

173459

# முகவுரை

திராவிட வாசக புஸ்தகங்கள் முற்றும் புதியதோர் முறையில் எழுதப்பட்டவை. இவை தொடர் முறைப் போதனைக்கு (*Correlative Methods of Teaching*) மிக்க அநுகூலமானவை.

2. இப் புத்தகத்துள் பெரும்பாலும் நீதிக்கதைகளும், சிறுபான்மை பொருட் பாடங்களும் காணும். சில பாடங்கள் முற்றும் இசைப் பாட்டாகவும் இயன்றிருக்கின்றன.

3. இந்தப் புத்தகத்தில் காணும் படங்கள் அனைத்தும் புதுவகையால், இதற்காகவே செய்யப்பட்டவை. அவை, கரும்பலகையில் சீமைச் சுண்ணம்புகொண்டு எழுதுவது போன்றவை; உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் அவற்றைப் பார்த்து, தாமே அவ்வகைய படங்களை எழுதப் பழகுவதற்கு இவை மிக்க உபயோக முள்ளவைகளாக இருக்கும்.

4. ஒவ்வொரு பாடத்திற்கும் பல படங்கள் காட்டியிருப்பதால் சில பாடங்கள் அளவில் நீண்டும் இருக்கும் அவ்வாறு நீண்டமை விஷயப் பெருக்கத்தினால் அன்று. திருஷ்டாந்த படங்கள் மிகுந்திருப்பதனால் உண்டாகும் பயன்கள் பலவாம் என்பதை உபாத்தியாயர்கள் நன்கு உணர்வார்கள்.

5. இப்புத்தகத்தின் விசேஷங்களும், போதனை முறைகளும் இதன் இறுதியில், 'போதனை முறைக் குறிப்புகள்' எனக் காட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றை உபாத்தியாயர்கள் நன்கு பாராட்டுவார்கள் என்று நம்புகின்றேன்.

கா. நம.



## நமது இந்திய சக்ரவர்த்தியாகிய
## ஐந்தாம் - ஜார்ஜ் மகிபர்
## வாழ்த்துப் பாட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGd.
17 JUL 1917
MADRAS.

('கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்னும் மெட்டு)

1. உலகமெங்கும் புகழ்பெருகும்
உத்தமனும் மன்னன்
உயர்குணங்க ளெல்லாந்திரண்
டோருருவாம் மன்னன்

2. அலகில்பல தேசங்களை
ஆதரிக்கும் மன்னன்
அல்லலெலாந் தீர்த்துநலம்
அருளவரும் மன்னன்

3. பலகலையும் தன்னறிவால்
பயின்றறிந்த மன்னன்
பயமனைத்தும் நீக்கிநம்மைப்
பாதுகாக்கும் மன்னன்

4. இலகுபல வேந்தருக்கும்
இறையவனா மன்னன்
எழில் 'ஐந்தாம் - ஜார்ஜ்' மன்னன்
என்றென்றும் வாழியவே

இரண்டாந்தர

## எலிமென்டரிப் பாடசாலைகளில் நடத்தவேண்டிய வாசகபாகங்கள்

இரண்டாந்தரத் திட்டம் — திருத்தமாகவும், விளக்கமாகவும் பேசுவதற்குப் போதுமான அப்பியாசம். தொடர்ச்சியாக விஷயங்களைப் பேசுவதில் பயிற்சி. சத்தமாகவும மௌனமாகவும் விஷய உணர்ச்சிக்காக வாசித்தல. சொற்றொடராக்கம் — கடிதங்கள் எழுதுவதில் வழக்கமாகக் கவனித்தறியவேண்டிய தொடக்கம், முடிவு, விலாசமிடல் முதலியவைகளுக்குப் போதுமான அறிவு.

(*a*) வாசித்தல் — விரைவாக எழுதியுள்ள தெளிவான கையெழுத்துப் பிரதியைப் பிள்ளைகள் சுலபமாகப் படிக்கவும, இரண்டாந்தர எலிமென்டரிப் பாடசாலைகளுக்காக அங்கீகரித்துள்ள பாடபுத்தகங்களில் ஏதேனு மொன்றில் குறிப்பிட்ட பாகத்தை வாசிக்கவும, அக் குறிப்பிட்ட பாகத்தில் கேட்கும் விஷய வினைக்களுக்கு விடை சொல்லவும் சக்தியுள்ளவர்களா யிருத்தல். பிள்ளைகள் இக்காலதிட்டத்திற்குள் வாசித்துள்ள பாட புத்தகங்களில் அவர்களுக்கிருக்குந் தேர்ச்சியையும் பரீக்ஷிக்கலாம்.

(*b*) சொற்றொடர் ஆக்கம் — பிள்ளைகள் தங்களுக்கு ஒருமுறை படித்துக் காட்டிய அல்லது சொல்லிய சாதாரண சிறிய கதையின் சாராம்சத்தை ஞாபக சக்தியைக்கொண்டு தங்கள் சொந்த வசனங்களால் சொல்ல அல்லது எழுத வல்லவர்களா யிருத்தல்; தங்கள் முன்பு வைத்துள்ள சாதாரணமான அல்லது வழக்கமான வஸ்துவைப் பற்றி அல்லது ஒரு படத்தின் சம்பந்தமான விஷயத்தைப் பற்றி விவரித்து வாய் மொழியாகச் சொல்ல வல்லவர்களா யிருத்தல்.

# பொருள் அடக்கம்


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் ஒருவர் உண்டு | 1 |
| 2. | **கடவுள்** | 4 |
| 3. | மூட வேலைக்காரர் | 5 |
| 4. | யோசனையின்றி மோசம்போனவன் | 8 |
| 5. | **நீதிக் கும்மி** | 12 |
| 6. | ஒரு யுக்தி | 13 |
| 7. | குரங்கும் முதலையும் | 16 |
| 8. | மூன்று மீன்கள் | 22 |
| 9. | பிறவிக் குருடர்கள் | 25 |
| 10. | **மாதா பிதா** | 30 |
| 11. | மூவரும் வந்தால் முடிப்பு வரும் | 31 |
| 12. | சகுனம் | 37 |
| 13. | ஆந்தை உபாத்தியாயர் | 40 |
| 14. | **வெண்ணிலா** | 42 |
| 15. | நாயும் ஞானியும் | 44 |
| 16. | **நாய்** | 48 |
| 17. | நரியும் நண்டும் | 49 |
| 18. | சாயம் வெளிப்பட்டது | 53 |
| 19. | சிறுவனுக்கிருந்த சிறந்த புத்தி | 58 |
| 20. | பிள்ளை வழக்கு | 63 |
| 21. | மந்திரியின் தந்திரம் | 67 |
| 22. | **விடு கதைகள்** | 71 |
| 23. | போனவன் வந்தான் | 72 |
| 24. | குதிரை முட்டை வாங்கினது | 79 |
| 25. | கெட்டமனைவி கேடடைந்தது | 83 |
| 26. | உபாயக் கள்ளன் | 86 |
| 27. | **இருசொல் அலங்காரம்** | 88 |
| I. | **வெற்றி வேற்கை** | 89 |



# மூன்றாம்
# திராவிட வாசக புஸ்தகம்

## 1. கடவுள் ஒருவர் உண்டு

கடவுள் ஒருவர் உண்டென்று நம்புகிறவர்களுக்கு ஆஸ்திகர் என்று பெயர். கடவுள் இல்லை என்று மறுக்கிறவர்களுக்கு நாஸ்திகர் என்று பெயர். ஒரு நாஸ்திகன் தானே ஆஸ்திகனாக மாறிய வரலாறு ஒன்று கூறுவோம்:

2. ஓர் ஊரில், வீரன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் கடவுள் இல்லை என்று மறுக்கும் நாஸ்திகன். தெய்வம் என்று அவனிடம் சொன்னால் சீறி விழுவான்; கடவுள் என்று சொல்லுவோரைக் காய்ந்து வைவான்: ஆலயங்களைக் கண்டால் அசட்டை செய்வான்; அடியாரைக் கண்டால் அவமதித்துப் பேசுவான்.

3. யாராவது வீரனிடம் கடவுளைப் பற்றிப் பேசினால், 'கடவுளை நீ நேரில் கண்டாயா? அவர் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? என்ன செய்கிறார்?' என்று பலவாறு குதர்க்கமாகக் கேட்டு, கேட்டவர் வாய்க்குப் பூட்டுப் போடுவான்.

4. ஒரு நாள், வீரன் ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்தான். அவன், வழியில் ஒரு குளக்கரையில் தங்கி, கட்டுசாதம் சாப்பிட்டு, களைதீர ஓர் ஆல



மரத்தின் அடியில் படுத்தான். படுத்து மேலே பார்த்தான்; மரத்தில் பழங்கள் நிறைந்திருக்கக் கண்டு, தனக்குள் ஆலோசிக்க ஆரம்பித்தான்.

5. ‘ஆஹா, இந்த ஆலமரம் எவ்வளவு பெரியதாய் ஓங்கி வளர்ந்திருக்கிறது! இது சுமார் கால் மைல் அளவுக்குப் பரந்திருக்கும்போல் காண்கிறது. சில இடங்களில் ஆலமரம் ஒரு மைல் அளவுக்கும் பரந்து வளர்ந்திருக்கின்றது. இவ்வளவு பெரிய மரத்திற்குக் காயோ கழஞ்சிக் காய் அளவாய் சிறுத்து இருக்கிறது. பரங்கிக் கொடியோ ஒரு விரல் அளவான பருமன் இருக்கும். அதன் காயோ பலாக்காய் அளவு பருத்திருக்கின்றது; இது என்ன ஆச்சரியம்!

6. சிலர் இவற்றை யெல்லாம் கடவுள் ஒருவர் படைத்ததாகச் சொல்லுகிறார்களே, அந்தக் கடவுளின் அறிவை என்னவென்று சொல்லலாம்! பெரிய மரத்திற்குச் சிறிய காயும் சிறிய கொடிக்குப் பெரிய காயும் படைத்தது மூடத்தனமல்லவா’ என்று எண்ணினான். அப்போது ஓர் ஆலங்காய் மரத்திலிருந்து அவன் புருவத்தின்மேல் விழுந்தது. விழவே திடுக்கிட்டு எழுந்து, ‘ஆஹா!’ நமக்கு நல்லபுத்தி வந்தது. கடவுளை மூடன் என்று எண்ணினேமே, அவர் மூடரல்லர், அவர் மிகவும் அறிவுடையவர். அவர் இந்த மரத்திற்கு ஏற்றதுபோல் பெரிய காயை உண்டாக்கி யிருந்தால், இப்போது நமது தலை நொருங்கிப்போய் இருக்கும் அல்லவா? அவர் அறிவே அறிவு. அவருடைய மகிமை தெரியாமல் இதுவரையில் வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டு இருந்தோமே! என்ன செய்வது! இனியாவது நாம் கடவுளை வழிபட வேண்டும்’ என்று தீர்மானித்து நற்புத்தி யடைந்தான்.

## 2. கடவுள்

1. தெய்வம் இகழேல்.
2. தெய்வம் சீறின் கைதவம் மாளும்.
3. தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
4. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.



ஜகத்தில் சூரிய சந்திரர் தோன்றப்
பகலும் இரவும் படைத்தவர் யாவர்
பரந்த பூமியில் பண்டங்களை யெலாம்
தரந்தர மாகத் தந்தவர் யாவர்
எந்த நேரமும் இடைவிடா திருந்து
சொந்தமாய்க் காக்கும் தந்தையார் யாவர்
புயலின் மழையைப் பொழிந்திடச் செய்து
தயவாய்க் காக்கும் தாயார் யாவர்
அவரே நம்மை ஆண்டருள் கடவுள்
அவரடி வணங்கி ஆதரிப் போமே.

## 3. மூட வேலைக்காரர்

ஓர் ஊரில் புலவர் ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி வெளியில் போய், பிரபுக்களையும் அரசர்களையும் கண்டு, பரிசு பெற்றுக்கொண்டு வருவார். அவருக்குப் பல்லக்குத் தூக்க நான்கு போயிகள் உண்டு. புலவர் போகும் இடங்களுக்கு அவரைப் பல்லக்கில் சுமந்து போவது அந்தப் போயிகளின் வேலை.



2. அந்தப் புலவர் வீட்டில் ஒரு பசு உண்டு. பசுவுக்குப் புல் அறுத்துக்கொண்டு வரும் பண்ணையாள் ஒருநாள் வரவில்லை; அவன் அன்று வியாதியா யிருந்தான். அது கண்ட புலவர் போயிகளைப் பார்த்து, 'பசுவுக்குக் கொஞ்சம் புல் அறுத்து வாருங்கள்' என்று சொன்னார். அதற்கு அந்தப்

போயிகள், 'ஐயா! பல்லக்குச் சுமப்பது எங்கள் கடமை; பசுவுக்குப் புல்கொண்டுவருவது எங்கள் கடமை அன்று' என்று பதில் சொன்னார்கள். புலவர் அவர்களுடைய அறியாமையை உணர்ந்து, பேசாமல் இருந்துவிட்டார்.

3. பிறகு ஒரு நாள் கன்றுக்குட்டி காணாமல் போயிற்று. அதைத் தேடுவதற்கு ஒருவரும் இல்லை. ஆகையால், புலவர் போயிகளைப் பார்த்து, 'நமது கன்றுக்குட்டியைக் காணோம், அதைத் தேடிப் பிடித்து வாருங்கள்' என்றார். உடனே, போயிகள், 'ஐயா! கன்றுக்குட்டியைத் தேடுவது எங்கள் காரியம் அன்று, பல்லக்குச் சுமப்பதுதான் எங்கள் வேலை' என்று புலவா கட்டளையை முற்றும் மறுத்து விட்டார்கள்.

4. புலவர் அவர்களுக்கு நற்புத்தி கற்பிக்க வேண்டும் என்று கருதி, பல்லக்குக் கொண்டுவர உத்தரவு செய்தார்; போயிகள் உடனே பல்லக்குக் கொண்டுவந்தார்கள். புலவர் அதில் ஏறிக்கொண்டு கன்றுக்குட்டியைத் தேட, தெருத்தெருவாகச்சுற்றியடித்தார். கன்றுக்குட்டி எங்கும் காணப்படவில்லை. அப்போது அந்தப் புலவர் போயிகளைப் பார்த்து, 'கன்றுக்குட்டி வீதிகளில் காணோம்; இனி, சந்துகளிலும் புறக்கடைகளிலும் குட்டிச் சுவர்களிலும் பார்க்கவேண்டும்; அவ்விடங்களுக்குப் போங்கள்' என்றார்.

5. போயிகள் அப்படியே சில இடங்களுக்குப் புலவரை சுமந்து சென்றார்கள். பிறகு அவர்களால் நடக்க முடியவில்லை. அதனால், அவர்கள் புலவரைப் பார்த்து, 'ஐயா! எங்களுக்குக் கால்

நோகிறது; இனி எங்களால் நடக்கமுடியாது' என்று முறையிட்டார்கள். புலவர், 'கூடாது, கூடாது, பல்லக்கைச் சுமப்பது உங்கள் வேலை; கன்றுக்குட்டியைத் தேடுவது என் காரியம்; நடவுங்கள், நடவுங்கள்' என்றார்.



6. இதைக் கேட்டவுடன் போயிகளுக்குப் புத்தி வந்தது. அவர்கள் புலவரைப் பார்த்து, 'ஐயா! எங்களுக்குப் புத்திவந்தது, கன்றுக்குட்டியை நாங்களே கண்டுபிடித்து வருகிறோம்; தாங்கள் வீட்டிலேயே இருங்கள்' என்றார்கள். புலவர் அவர்களுக்குப் புத்தி வந்ததை உணர்ந்து, அவர்களுக்கு அப்படியே உத்திரவு கொடுத்தார். போயிகள் போய் பல இடங்களிலும் தேடி, கன்றுக்குட்டியைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்தார்கள். அது முதல் அவர்கள் தம் எஜமானன் சொற்படி நடந்துகொண்டார்கள்.

## 4. யோசனையின்றி மோசம் போனவன்

ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் பக்ஷிகளை வாங்கி வளர்த்து, மற்றவர்களுக்கு விற்-



பது வழக்கம். கிளி, மைனு முதலிய பாடும் பக்ஷி-களுக்குப் பேசக் கற்றுக்கொடுத்து அவைகளை அதிக விலைக்கு விற்பான்.

2. ஒருமுறை அவன் பச்சைக் கிளி ஒன்றை வளர்த்தான். அவன் அந்தக் கிளிக்கு, 'அதற்கென்ன சந்தேகம்' என்னும் வாக்கியத்தை மாத்திரம் நன்றாய்க் கற்பித்தான். அந்தக் கிளியோடு யார் என்ன பேசினாலும், அக்கிளி, 'அதற்கென்ன சந்தேகம்' என்று தட்டுத் தடையின்றிச் சொல்லும்.

3. அந்த வியாபாரி ஒரு நாள் அந்தக் கிளியை விற்பனை செய்யக் கடைவீதிக்குக் கொண்டுபோனான். அங்கே அதை வாங்க அநேகர் விலை பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் அதன் விலை ஒரு நூறு ரூபாய் என்று சொன்னான் வர்த்தகன். அது அதிக விலை என்று எண்ணி ஒருவரும் அதை வாங்கவில்லை.

4. முடிவில் ஒரு பிரபு அங்கே வந்தான்; அவன் கொஞ்சமும் முன் யோசனை இல்லாதவன்; முன் பின் யோசியாமல் காரியம் செய்வான்; செய்து விட்டு, பச்சாத்தாபப் படுவான். அவன் அந்தக் கிளியை வாங்க இஷ்டப்பட்டு, வியாபாரியைப் பார்த்து, 'அதன் விலை என்ன?' என்று கேட்டான்; வியாபாரி, 'ஒரு நூறு ரூபாய்க்கு ஒரு பையுங் குறையாது' என்று பதில் சொன்னான். அதன்மேல் அந்தப் பிரபு, 'ஒரு கிளி ஒரு நூறு ரூபாயும் விலை பெறுமா?' என்று கேட்டான். வியாபாரி, 'அதை என்னை ஏன் கேட்கிறீர்? அந்தக் கிளியையே கேளும்' என்றான். பிரபு கிளியைப் பார்த்து, 'ஒரு நூறு ரூபாய் உனக்கு ஏற்ற விலைதானா?' என்றான். கிளி உடனே, 'அதற்கென்ன சந்தேகம்' என்றது. பிரபு அதன் விடையைக் கேட்டு, மற்றொன்றும் பேசாமல், ஒரு நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு, அந்தக் கிளியைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போனான்.

5. பிரபு தான் வாங்கின கிளியைப்பற்றி வீட்டில் உள்ளவர்களோடு மிகவும் புகழ்ந்து பேசினுன்; வீட்டில் உள்ளவர்கள் அதன் விலை அதிகம் என்று சொல்ல, அவர்களை மூடர்கள் என்று வைதான். பிரபு சாப்பிட்டு முடிந்தபிறகு, தான் வாங்கின கிளியோடு சம்பாஷிக்க எண்ணங் கொண்டான். உடனே அவன் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு, அக் கிளியைக் கூட்டோடு தன் முகத்துக்கு நேரே கட்டிக்கொண்டான் அவன் தான் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் கிளி வெகு சாதுரியமாகப் பதில் சொல்லும் என்று எண்ணிச் சந்தோஷித்தான்.



6 பிறகு, அந்தப் பிரபு கிளியைப் பார்த்து, 'ஓ கிள்ளையே! நீ என்னோடு பேசுகிறுயா?' என்றுன். உடனே அது, 'அதற்கென்ன சந்தேகம்' என்றது. அதைக் கேட்கவே பிரபுவுக்கும் மற்றவர்களுக்கும் அளவற்ற ஆநந்தம் உண்டாயிற்று. பிரபு பின்னும், 'உன்னை வளர்த்தவன் யார்?' என்றுன். கிளி,

'அதற்கென்ன சந்தேகம்' என்றது. பிரபு, கிளி ஏதோ மயங்கிப் பதில் சொல்கிறது என்று எண்ணி, 'உன்னை வளர்த்தவன் யார்?' என்று உரத்துக் கேட்டான். கிளி, 'அதற்கென்ன சந்தேகம்' என்று தானும் உரத்துச் சொல்லிற்று. பிரபுவுக்கு அதன் மேல் சந்தேகம் பிறந்து, வேறு வேறு கேள்விகள் கேட்டான். அவைகளுக் கெல்லாம் கிளி, 'அதற்கென்ன சந்தேகம்; அதற்கென்ன சந்தேகம்' என்றே பதில் சொல்லிற்று.

7. பிரபு, தான் யோசியாமல் மோசம்போனதை எண்ணி வருத்தமடைந்தான். முடிவில் அவன் அந்தக் கிளியைப் பார்த்து, 'ஓ கிளியே! கொஞ்சமும் யோசனையின்றி உனக்காக ஒரு நூறு ரூபாய் கொடுத்தேனே, நான் ஒரு மூடனல்லவா?' என்றான். அதற்குக் கிளி உடனே, 'அதற்கென்ன சந்தேகம்' என்றது. அதைக்கேட்டு அங்கிருந்தவர்கள் எல்லாம் சிரித்தார்கள். அது கண்டு அந்தப் பிரபு வெட்கம் அடைந்தான்.

1. தூக்கிவினை செய்.
2. இயல்பலாதன செயேல்.
3. அழகலாதன செயேல்.
4. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
5. பத்து வந்தாலும் பதற்றமாகாது.
   ஐந்து வந்தாலும் அவசரமாகாது.
6. ஆய்ந்தோய்ந்து பாராதான் வாழ்க்கை
   சாந்தனையும் துன்பந்தரும்.
7. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
8. ஆழமறியாமல் காலையிடாதே.

## 5. நீதிக் கும்மி

1. நல்லவ ணகைப் பெய ரெடுப்பாய்—சொல்லும்
நற்புத்தி கேட்டே அவை யடுப்பாய்
பொல்லாத செய்கைகளை விடுப்பாய்—இந்தப்
போதனையை நெஞ்சினிலே படுப்பாய்

2. நாய்களைக் கல்லால் அடிக்காதே—ஒரு
நாளும் பூச்சியைப் பிடிக்காதே
மாயவே காலை மடிக்காதே—மாட்டின்
வாலை முறுக்கி ஒடிக்காதே

3. எறும்பைத் துரும்பாய் மதிக்காதே—அதை
எங்கேயும காலால் மிதிக்காதே
குறும்புகள் பேசிக் குதிக்காதே—பிறர்
குற்றத்தை நெஞ்சில் பதிக்காதே

4. அன்னியர் மேல்குறை கூறாதே—உன்றன்
அன்னை தந்தைசொல்லை மீறாதே
கன்ன மிடுவோரைச் சேராதே—கெட்ட
காரியம் கண்ணாலும் பாராதே

5. ஏழையைக் கண்டு சிரியாதே—பல
ஈனரைக் கூடித் திரியாதே
வாழ்வாரைக் கண்டால் எரியாதே—சிறு
வஞ்சனை யேதும் புரியாதே

6. சண்டைக்குக் கைகட்டி நில்லாதே—உன்றன்
தலைபோனாலும் பொய் சொல்லாதே
சண்டாளர் கூட்டத்தில் செல்லாதே—பெற்ற
தாயாரே சொன்னாலும் கொல்லாதே

7. குண்டுணியாய் சண்டை மூட்டாதே—குறு
குறுத்த முகத்தைக் காட்டாதே
ஜண்டித் தனம்நெஞ்சில் நாட்டாதே—ஜக
ஜாலப் புரட்டுகள் நீட்டாதே.

## 6. ஒரு யுக்தி

முத்து, பொன்னன் என்னும் இரண்டு பிள்ளைகள் ஒரு பாடசாலையில் வாசித்துக்கொண்டு இருந்தார்கள். முத்து புத்திசாலி, யுக்தி யுள்ளவன், எந்தக்



காரியத்தையும் யோசித்து நன்றாய் செய்வான். யார் என்ன கேட்டாலும் உடனே யுக்தியாகப் பதில் சொல்லுவான். பொன்னன் மந்தபுத்தி

யுள்ளவன் ; யுக்தியாய் ஏதாவது சொன்னால் சீக்கிரமாகக் கிரகிக்கமாட்டான்.

2. ஒருநாள் முத்தும் பொன்னனும் வீதியில் நின்று பேசிக்கொண் டிருந்தார்கள். பொன்னன் முத்து என்பவனை எப்படியாவது ஏமாற்றவேண்டும் என்று எண்ணினான்; அதற்காக சில விடுகதைகளை வருந்திக் கற்றுக்கொண்டு வந்தான். அவைகளை விடுவிக்கும்படி பொன்னன் தன் சிநேகிதனைக் கேட்டான் ; முத்து அதற்கு ஒப்புக்கொண்டான். பொன்னன் தன் விடுகதைகளை வெளியிட்டான் ; அவற்றிற் கெல்லாம் முத்து உடனுக்குடன் பதில் சொன்னான். அதைக் கண்டு சிலர் அங்கே கூட்டமாகக் கூடினார்கள். முத்து அப்போது ஒரு வேடிக்கை காட்ட எண்ணினான்.

3. முத்து பொன்னன் என்பவனைப் பார்த்து, 'நண்பா! நான் ஒன்று சொல்லுகிறேன்; அதன்படி நீ செய்கிறாயா?' என்றான். 'அதென்ன ? சொல், அப்படியே செய்கிறேன்' என்றான் பொன்னன். அதன்மேல் முத்து, 'நான் கண்ணை மூடிக்கொண்டு செய்யும் காரியத்தை, நீ கண்ணைத் திறந்துகொண்டு செய்கிறாயா?' என்று கேட்டான். பொன்னன், 'ஆஹா செய்கிறேன்' என்றான். முத்து அங்கே இருந்தவர்களை அதற்கு மத்தியஸ்தராக ஏற்படுத்தினான். அவர்களும் இது என்ன சங்கதி என்று அறிய ஆவல் கொண்டார்கள்.

4. உடனே முத்து கீழே உட்கார்ந்து, பூமியில் இருந்த மணலை குவித்தான். பொன்னனும், மற்றவர்களும் திறந்த கண் மூடாமல் பார்த்துக்-

கொண்டு இருந்தார்கள். உடனே முத்து மத்தி-யஸ்தர்களைப் பார்த்து, 'இதோ பாருங்கள், நான் கண்ணை மூடிக்கொண்டு செய்கிறேன்' என்று மணலை வாரித் தன் கண்களின்மேல் கொட்டிக் கொண்டான். பிறகு அவன் கண்ணைத் துடைத்து விட்டு, பொன்னனைப் பார்த்து, 'எதோ, நீ இந்தக்



காரியத்தை உன் கண்ணைத் திறந்துகொண்டு செய் பார்க்கலாம்' என்றான். பொன்னன், 'ஒஹோ, இது என்னால் முடியாது' என்று சொல்லி ஓட்டம் பிடித்தான். மத்தியஸ்தர்கள் முத்து என்பவன் யுக்தியை வியந்து மெச்சினார்கள்.

## 7. குரங்கும் முதலையும்

கங்கைக் கரையிலிருந்த ஒரு நாவல் மரத்தில் வானரம் ஒன்று வசித்திருந்தது. அந்த நதியில் ஒரு



முதலை தன் மனைவியோடு குடியிருந்தது. ஒருநாள் குரங்கு முதலையைப் பார்த்து, அதன் க்ஷேமத்தை

விசாரித்தது. அதுமுதல் இரண்டுக்கும் சிநேகம் உண்டாயிற்று. அதனால் குரங்கு தினந்தோறும் தனக்குக் கிடைக்கும் பழங்களில் கொஞ்சம் முதலைக்குக் கொடுக்கும். முதலை அதைத் தின்றுவிட்டு, தன் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போகும்.

2. இப்படியிருக்கையில் ஆடி மாதம் வந்தது. ஆடி மாதத்தில் நாவல் பழம் அதிகம் அல்லவா? அதனால், குரங்கு தினம் தன் நண்பனுக்கு நாவற் பழம் பறித்துக் கொடுக்கும்; முதலை அதை ஆவலுடன் அருந்தும். ஒருநாள் குரங்கு நாவற் பழத்தை அதிகமாகப் பறித்துக் கொடுத்தது. முதலை வேண்டியமட்டும் தின்றும் பழம் மிகுந்துவிட்டது. முதலை மிகுந்த பழங்களைக் கொண்டுபோய், தன் மனைவிக்குக் கொடுத்தது. பெண் முதலை அந்தப் பழங்களைத் தின்று பரமானந்தம் அடைந்தது.



3. பிறகு, பெண் முதலை தன் நாயகனைப் பார்த்து, 'இந்த அருமையான பழம் இன்று எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டது. அதற்கு ஆண் முதலை, 'பெண்ணே! எனக்கு ஒரு சிநேகிதர் இருக்-

கிறார்; அவர் எனக்கு இந்தப் பழங்களைக் கொடுத்தார்; அவைகளை நான் உனக்குக் கொண்டு வந்தேன்' என்றது. பெண் முதலை, 'நாயக! அவர் இப்படிப்பட்ட பழங்களைத் தினமும் தின்பார் அல்லவா?' என்று கேட்டது. 'ஆமாம், ஆமாம்' என்று பதில் சொல்லிற்று ஆண் முதலை. அதன் மேல்,

பெண் முதலை — (பாட்டு)

இந்தப் பழம் தின்போனுக்கு ஈரல் நன்றாய் இருக்கும்
அந்த ஈரல் தனைநாம்தின்றால் அங்கமெல்லாம் பருக்கும்
என்னரிய நாதா அதன் ஈரலை எவ்விதமும்
தின்னவழி தேடாவிடில் தின்னேன் வேறே எதையும்

ஆண் முதலை —

ஈரலை நான் எந்தவிதம் எடுத்து வர முடியும்
பேராசையால் பிடிவாதமாய் பேசேல் மறுபடியும்

பெண் முதலை —

விருப்பமுள்ள ஈரலை நீர் விரைவில் தாராவிடிலோ
வருத்தமுடன் என்னுயிரை மாய்ப் பேனொரு நொடியில்

ஆண் முதலை —

அகப்படாத பொருளின்மீதில் ஆசை வைக்கலாமோ
முகத்தில் விழிக்கும்நேசனை மோசஞ் செய்யப்போமோ

பெண் முதலை —

மோசமில்லைநான்சோல்வதைமுற்றும்நன்றாய்க் கேளும்
ஆசையுடன் விருந்தாகவே அழைத்துக்கோண்டு மீளும்

ஆண் முதலை —

அப்படியே கோண்டுவேந்து அவரைஇங்கே சேர்ப்பேன்
எப்படியும் உன்னுசையை இஷ்டத்துடன் தீர்ப்பேன்

என்றது. பெண் முதலை சந்தோஷம் அடைந்தது.

4. ஆண் முதலை தன் வழக்கப்படி கரைக்கு வந்தது. குரங்கு தன் சிநேகிதனைக் கூப்பிட, முதலை ஒன்றும் பேசவில்லை. அதனால், முதலை விசனத்துடன் இருப்பதைக் குரங்கு தெரிந்துகொண்டு, 'நண்பரே! என்ன சங்கதி? ஏன் வருத்தமாய் இருக்கிறீர்?' என்று கேட்டது. அதற்கு முதலை, 'ஐயா குரங்காரே! நீர் நேற்றுக் கொடுத்த பழத்தைக் கொண்டுபோய், என் மனைவிக்குக் கொடுத்தேன். அவள் அதைத் தின்று சந்தோஷித்து, "இது ஏது?" என்று கேட்டாள். நான் உன்னைப்பற்றி அவளுக்குச் சொன்னேன். அதைக் கேட்டு, மனம் பூரித்து, உனக்கு விருந்து வைக்க இஷ்டப்பட்டாள். எல்லாம் சித்தம் செய்திருக்கிறாள். நீ வருவையோ இல்லையோ என்று சந்தேகிக்கிறேன்' என்றது.

5. முதலையின் சொல்லைக்கேட்ட குரங்கு, 'அன்பரே! விருந்துக்கு வர ஆக்ஷேபம் இல்லை. நான் தண்ணீரில் எப்படி வருவேன்? தண்ணீர் எனக்கு சத்துரு அல்லவா?' என்றது. முதலை அதைக் கேட்டு, தன் காரியம் பலித்தது என்றெண்ணி, 'அன்பரே! நீர் தண்ணீருக்காகப் பயப்படவேண்டாம். நீர் என் முதுகின்மேல் ஏறிக்கொள்ளும், நான் பத்திரமாகக் கொண்டுபோய் சேர்க்கிறேன்' என்றது. குரங்கு அதற்குச் சம்மதித்து, மரத்திலிருந்து இறங்கி வந்து, முதலையின் முதுகின்மேல் ஏறிக்கொண்டது. முதலை நீந்திக்கொண்டே சிறிது தூரம் சென்றது. செல்லுகையில், குரங்கு இனி தப்பியோட முடியாது என்று எண்ணிய முதலை, அதைப் பார்த்து, 'அன்பரே! உம்முடைய ஈரலைத் தின்னவேண்டும் என்னும் விருப்பத்தினால் என்

மனைவி உம்மை அழைத்துவரச் சொன்னாள்; அதனால் உம்மை அழைத்துக்கொண்டு போகிறேன்; உம்முடைய உயிரின்மேல் வைத்திருக்கும் ஆசையை இனி விட்டுவிடும்' என்றது.



6. குரங்கு முதலையின் மோசத்தை யுணர்ந்து, மனம் தளராமல், 'ஆஹா என் அரிய நண்பரே, உமக்காக என் உயிரைக் கொடுக்கக் கொஞ்சமும் பின்வாங்கமாட்டேன். ஆனால், என் ஈரலை இன்றுதான் நன்றாய்க் கழுவி, நான் இருக்கும் மரத்தில் உலரவைத்தேன்; இது முன்னமே தெரிந்திருந்தால் அதை எடுத்துக்கொண்டு வந்திருப்பேன்; என்ன செய்வது! நீர் என்னை அழைத்துக்கொண்டு போனாலும் பயனில்லையே' என்றது.

7. அதைக்கேட்ட முதலை திடுக்கிட்டு, 'இதற்கு என்ன செய்யலாம்!' என்று குரங்கைக் கேட்டது. குரங்கு முதலையைப்பார்த்து, 'முதலையாரே! என்னை

மறுபடியும் என் இடத்திற்கு நீர் கொண்டுபோனால், நான் மரத்தி லிருக்கும் என் ஈரலை எடுத்துக்கொண்டு வருகிறேன்' என்றது. அதை மெய்யென்று நம்பிய முதலை, அப்படியே குரங்கைக் கொண்டுவந்து கரையில் சேர்த்தது. உடனே குரங்கு பாய்ந்தோடி மரத்தில் ஏறிக் கொண்டது. பிறகு, முதலை குரங்கைக் கூப்பிட்டது.

8. குரங்கு முதலையைப் பார்த்து, 'அடா மூடா! பெண் பேச்சைக் கேட்டு, பித்தம் பிடித்த பேயா! எவனாவது ஈரலை எடுத்து வெளியில் வைப்பானா! இது தெரியாதா! ஓடிப்போ' என்றது. முதலை ஏமாந்து, துக்கத்தோடு திரும்பிவந்து நடந்த விஷயத்தைத் தன் மனைவிக்குச் சொல்லிற்று. பெண் முதலை அதைக் கேட்டு, தன் பிராணனை விட்டது. அதே விசனமாய் ஆணும் இறந்தது.

---

1. தீவினை அகற்று.
2. கேட்டிலுறுதி கூட்டும் உடைமை.
3. சூதும் வாதும் வேதனை செய்யும்.
4. நம்பவைத்துக் கழுத்தை அறுக்கலாமா?
5. நம்பினவரை நட்டாற்றில் விடலாமா?
6. அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான்.
7. அடாது செய்பவன் படாது படுவன்.
8. அடி நாக்கில் நஞ்சு நுனிநாக்கில் அமுதம்.
9. அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?
10. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.

## 8. மூன்று மீன்கள்

ஒரு தடாகத்தில் பல மீன்கள் வசித்துக்கொண்டு இருந்தன. அவற்றுள் வருமுன் காப்போன் என்றும் வருங்கால் காப்போன் என்றும் வந்தபின் காப்போன் என்றும் மூன்று மீன்கள் இருந்தன.

2. ஒருநாள் இரண்டு செம்படவர்கள் அந்தக் குளத்தண்டை வந்தார்கள். குளத்தில் மீன்கள் மிகுதியாக இருப்பதையும் தண்ணீர் வற்றியிருப்பதையும் கண்டார்கள். மறுநாள் அங்கு வந்து வலை வீசி, அந்த மீன்களைப் பிடிக்கவேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.



3. அவர்கள் சம்பாஷணையை உற்றுக் கேட்டுக்கொண் டிருந்த வருமுன் காப்போன் தன் சிநேகிதரிடத்திற்குப் போய், 'நாம் இவ்விடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்படவேண்டும். இனி இங்கு நிமிஷமும் நிற்கக்கூடாது' என்றது. அதைக் கேட்ட மற்ற இரண்டு மீன்களும், 'என்ன சங்கதி?' என்று வருமுன் காப்போனைக் கேட்டன. அது, செம்படவர் பேசிக்கொண்ட சங்கதியை அவைகளுக்குச் சொல்லிற்று.

4. வருங்கால் காப்போன் அந்தச் சங்கதி கேட்டு, 'நண்பர்களே! இதற்காக நாம் அவசரப்பட்டு இருப்பிடத்தை விடலாகாது. நமக்கு ஆபத்து வரும்போது பார்த்துக் கொள்வோம். காரியம் நேரும்போது அதற்கு ஏற்ற கருத்தும் உண்டாகும்' என்றது. பிறகு, வந்தபின் காப்போன், 'வருவதைத் தடுத்தாலும் அது நிற்காது; வாராததை அழைத்தாலும் அது வாராது. ஆதலால், நான் இருந்த இடத்திலேயே இருக்கிறேன்' என்று அக் குளத்திலேயே தங்கியிருந்தது.



5. பிறகு, வருமுன் காப்போன் தனது அரிய நேசர்களை விட்டு அண்டையிலிருந்த வேறொரு குளத்திற்குப் போய்விட்டது. மற்ற இரண்டும் இருந்த இடத்திலேயே தங்கியிருந்தன. மறுநாள் காலையில் செம்படவன் அங்கு வந்து, வலை வீசி மச்சங்களைப் பிடித்தான். அதில் வருங்கால் காப்போன் அகப்பட்டுக்கொண்டு பயந்து, செத்தாற்போல் பாசாங்கு பண்ணிற்று. செம்படவன் அது செத்தது என்று எண்ணி, அதை எடுத்துக் கரைமேல் போட்டுவைத்தான். பிறகு, அது அவன் கண்ணுக்குத் தப்பி,

துள்ளித் துள்ளித் தண்ணீரில் குதித்து, ஒரு கல்லின் சந்தில் பதுங்கிக்கொண்டது.

6 செம்படவன் இரண்டாம் முறை தன் வலை-யை வீசினன். அதில் வந்தபின் காப்போன் அகப்-பட்டுக்கொண்டு, ஒன்றும் தோன்றமல் அங்குமிங்-



கும் ஓடிற்று. செம்படவன் ஆத்திரத்தோடு அதைப் பிடித்து, அடித்துக் கொன்று விட்டான். மற்ற இரண்டு மீன்களும் ஆபத்துக்குத் தப்பிச் சுகம் அடைந்தன.

# 9. பிறவிக் குருடர்கள்

பிறவிக் குருடர்களான நான்கு மனிதர்கள், ஒரு சாலை யோரத்தில் உட்கார்ந்து, பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவர்கள் காதில் மணி யோசை கேட்டது. குருடர்களில் ஒருவன், 'என்ன, மணி யோசை கேட்கிறதே? கோயிலில் பூஜை நடக்கிறதோ?' என்றான். மற்றொருவன்,



'இது கோயில் மணி அன்று; இந்த மணியோசையை உற்றுக் கேட்டால், யானை வருவதுபோல் தோன்றுகிறது' என்றான்.

2. மூன்றாவது குருடன், 'இதென்ன புதுமையாக இருக்கிறது! மணி யோசைக்கும், யானை வருவதற்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டான். அதற்கு முதல் குருடன், 'ஆஹா நன்றாயிருக்கிறதே! யானை வருவதற்கும் மணி யோசைக்கும் சம்பந்தம் இல்லையா? "யானை வரும் பின்னே மணி

யோசை வரும் முன்னே'' என்னும் பழமொழியை நீர் கேட்டதில்லையோ ?' என்றான்.

3. நான்காம் குருடன், 'நல்லது இருக்கட்டும், அவசரப்படுவானேன் ; எல்லாம் சற்று நேரத்தில் தெரிகிறது' என்று சொன்னான். அதற்குள் பாகன் தன் யானையை நடத்திக்கொண்டு குருடர்கள்



இருந்த இடத்தைக் குறுகினான். யானையைச் சூழ்ந்து சென்ற மனிதர்கள் இரைச்சலிட்டுப் பேசிக்கொள்-வதனால், குருடர்கள், அது யானைதான் என்று உணர்ந்தார்கள். உடனே, அவர்கள் யானைப் பாக-னைக் கூப்பிட்டு,

(பாட்டு)

குருடர் — நாங்கள் காண யானையை நீர்
நடத்தி வாருமே
ஈங்கே யதைக் கண்டா லெங்கள்
எண்ணந் தீருமே.

பாகன் — நன்று நன்று உங்கள் எண்ணம்
நான்கு பேரும் நீர்
என்றும் பிறவிக் குருடரன்றோ
எப்படிக் காண்பீர்?

குருடர் — கண்களில்லா விடினும் நாங்கள்
கையால் தடவியே
எண்ணும் கருத்தி னுலுணர்ந்து
இன்ப மடைகுவோம்



பாகன் — ஆனால் சரி யானை தன்னை
அருகில் நிறுத்துவேன்
ஆனமட்டும் தடவிப் பார்த்தே
அடையும் திருத்தியே

என்று சொல்லி, பாகன் யானையைக் குருடருக்குச் சமீபத்தில் கொண்டுவந்து நிறுத்தினான். நான்கு குருடரும் நகர்ந்து வந்து, ஒருவன் காலையும், ஒரு-வன் வாலையும், மற்றொருவன் காதையும், வேறொரு-

வன் தும்பிக்கையையும் தடவிப் பார்த்து, தமது இருப்பிடத்திற்குத் திரும்பி வந்து உட்கார்ந்தார்கள். யானைப் பாகன் இவர்கள் செய்கையைக் கண்டு சிரித்துக் கொண்டே போய்விட்டான்.

4. பிறகு, குருடர் தாம் கண்ட யானையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். ஒருவன் மற்றவனைக் கூப்பிட்டு, 'அண்ணே! நீ யானையை நன்றாய்த் தடவிப்பார்த்தாயா?' என்று கேட்டான்.



அதற்கு மற்றவன், 'ஆஹா, நான் நன்றாய் தடவிப் பார்த்தேன்; நான் உணர்ந்ததுபோல் நீங்கள் உணர்ந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்' என்றான். அப்போது,

வாலைத் தொட்டவன் — (பாட்டு)

ஆஹா நான்தான் அறிந்ததைச் சொல்வேன்
அன்பரே நீர் கேளும்
வாகா யதுவோரு துடைப்பம் போலவே
வளர்ந்திருக்கின் றதுவே.

காதைத் தொட்டவன் —

ஓஹோ அதுபோய் உண்மையைக் கேளும்
உரைப்பேன் நான் நன்ருய்
மோகமுடனே கண்டேன் அதுவொரு
முறம்போல் இருந்ததுவே.

காலைத் தொட்டவன் —

அல்ல அல்ல நீங்கள் நன்ருய்
அதைப் பார்த்தவ ரல்ல
கல்லால் செய்த உரல்போ லேயது
காணப் பட்டதுவே.

தும்பிக்கையைத் தொட்டவன் —

மூவர் சொன்னது முற்றும் பிசகாம்
மொழிவேன் உண்மையை நான்
மேவிக் கண்டேன் அது உலக்கையைப்போல்
விளங்கி இருந்ததுவே

என்று ஒருவர்க்கொருவர் மாறுபட்டுப் பேசினர்கள். பிறகு, அவனவன் தான் தான் கண்டதே சரியென்று சொல்லிச் சண்டை பிடித்தான். அதைக் கண்ட சிலர் அங்கே கூடி அவர்களுக்கு நியாயம் சொன்னர்கள்.

ஐயா நீங்கள் உணர்ந்தவை யெல்லாம்
ஆனையின் உருவல்ல
மெய்யா ஒவ்வோன் ருெவ்வோ ருருப்பாம்
விளங்க அறிவீரே
துடைப்பம் போன்றது வாலாம் முறம்போல்
தோன்றியதே காதாம்
கிடக்கும் உரல்போல் இருந்ததுவே கால்
கேட்பீர் குருடர்களே

தொங்கும் உலக்கையைப்போன்ற அவ்வுறுப்பே
தும்பிக்கை யாகும்
இங்கதை நீங்கள் உணராமல் ஏன்
இடுகின்றீர் சண்டை.
இப்படியே சிலர் இனந் தெரியாமலே
என்றுமோர் பிடிவாதம்
தப்பிதமாய்க் கொண்டே பல பேசிச்
சங்கட மடைவாரே

என்று சொன்னார்கள். அதைக் கேட்ட குருடர் தமது அறியாமையை எண்ணி வெட்கமடைந்தார்கள்.

## 10. மாதா பிதா

1. மாதா பிதாவை வணங்கு — நாளும்
ஆதாரமாகவே அவர் சொல்லுக் கிணங்கு
2. தந்தைதாய் சாபம் பொல்லாது — அவர்
சிந்தை நொந்தால் மக்கள் செல்வம் நில்லாது
3. மாதா பிதாவுக்குத் துரோகம் — செய்யும்
பாதகரைச் சுற்றும் பாவம் அநேகம்
4. பெற்றவர் நேசத்தைத் தேடு — அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு
5. உள்ள தாய் தந்தைக்குத் தீங்கு — செய்யும்
பிள்ளையைத் தன் பிள்ளையே பழிவாங்கும்
6. கடலைப்போல் மாதா சகாயம் — அதற்
குடலைச் செருப்பாய் உதவலும் நாயம்

(மாதா பிதாவை) (பெண்மதி மாலை)

## 11. மூவரும் வந்தால் முடிப்பு வரும்

மூன்று மனிதர் சேர்ந்து ஓர் ஊருக்குப் போனார்கள். போகும் வழியில் அவர்கள் ஒரு முடிப்பைக்



கண்டெடுத்து, அதை அவிழ்த்துப் பார்த்தார்கள். அதில் நிறையப் பொன்காசு இருந்ததைக் கண்டு சந்தோஷித்து, 'இன்று நரி முகத்தில் விழித்தோம்'

என்று எண்ணிக்கொண்டு, அதைத் தம் மூட்டை-யில் வைத்து முடிந்துகொண்டு சென்றூர்கள்.

2. அவர்கள் சிறிது தூரம் நடந்து, ஒரு கிராமத்தை யடைந்தார்கள். அங்கே ஒரு குளக்கரையில்



கட்டுசாதம் சாப்பிடத் தீர்மானித்து, அருகில் இருந்த ஒரு கடைக்குப்போய், தங்கள் மூட்டையை அந்தச் செட்டியிடம் கொடுத்து, 'ஐயா! நாங்கள்

மூவரும் வந்து கேட்டால், இந்த மூட்டையைக் கொடும்' என்று சொல்லிவிட்டு, கூப்பிடு தூரத்தில் இருந்த அந்தக் குளத்திற்குப் போனார்கள். மூவரும் கட்டுசாதம் சாப்பிட்டு முடிந்ததும், செட்டியிடம் கடனாகக் காலணாவுக்கு வெற்றிலைப் பாக்கு வாங்கி வரத் தங்களில் ஒருவனை அனுப்பினார்கள். அவன்



மிகவும் தந்திரசாலி. அவன் அப்படியே கடைக்கு வந்து, மூட்டையைக் கொடுக்கும்படி செட்டியைக் கேட்டான். செட்டி, 'மூவரும் வந்தால்தான் மூட்டையைக் கொடுப்பேன்' என்றான். வந்தவன் கடையண்டை நின்றபடியே, குளத்தண்டை இருந்தவர்களைக் கூப்பிட்டு, 'செட்டியார் கொடுக்கமாட்டேன் என்கிறார்' என்று சொன்னான். குளத்தண்டை இருந்த இருவரும் செட்டியாரைக் கூப்பிட்டு, 'கொடும், கொடும்' என்றார்கள். உடனே,

செட்டி மூட்டையை எடுத்துக் கொடுக்க, வந்த மனிதன் அதை வாங்கிக்கொண்டு, போனவழி தெரியாமல் போய்விட்டான்.

3. வெற்றிலைப் பாக்கு வாங்கப் போனவன் திரும்பி வாராமையால், மற்ற இருவரும் திடுக்கிட்டு, கடையண்டை வந்து செட்டியைக் கேட்டார்கள். 'அவன் மூட்டையை வாங்கிக்கொண்டு முன்னமே போய்விட்டான்' என்றான் செட்டி. அதுகேட்ட இருவரும் வயிறெரிந்து, செட்டியின் மடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு, நியாயாதிபதியிடம் போனார்கள். நியாயாதிபதி அவர்கள் வழக்கை முற்றும் விசாரித்து, செட்டியின்மேல் சிறிதும் குற்றமில்லை என்பதை உணர்ந்தான்.

நியாயாதிபதி—செட்டியாரே! இவர்கள் உம்மிடத்தில் மூட்டையைக் கொடுத்தது உண்மைதானா?

செட்டி — ஆம் ஐயா கொடுத்தார்கள்.

நியாயாதிபதி — இவர்கள் மூட்டையைக் கொடுத்த-போது என்ன சொன்னார்கள்?

செட்டி — 'நாங்கள் மூவரும் வந்து கேட்டால், இந்த மூட்டையைக் கொடும்' என்றார்கள்.

நியாயாதிபதி — அந்த மூட்டை எங்கே?

செட்டி — ஐயா! இவர்களில் ஒருவர் வந்து மூட்-டையைக் கேட்டார்; நான் கொடுக்கமாட்-டேன் என்றேன். பிறகு, இவர்கள் இரு-வரும் குளத்தண்டை இருந்தபடியே, 'கொடும், கொடும்' என்றார்கள். நான் வந்தவரிடம் மூட்டையைக் கொடுத்துவிட்-டேன். பிறகு எனக்கு ஒன்றும் தெரியாது.

நியாயாதிபதி — (பிரயாணிகளைப் பார்த்து) நல்லது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

பிரயாணிகள் — நாங்கள் செட்டியாரிடம் மூட்டையைக் கொடுத்து, மூவரும் வந்து கேட்டால் இதைக் கொடும் என்று சொன்னோம். நாங்கள் அருகிலிருந்த குளத்தண்டை சாப்பிட்ட



பிறகு, கடனாக வெற்றிலைப்பாக்கு வாங்கிவர, எங்களில் ஒருவனைச் செட்டியாரிடம் அனுப்பினோம். ஆனால், மூட்டையை வாங்கிவர நாங்கள் அவனிடம் சொல்லவில்லை.

நியாயாதிபதி — தாம்பூலம் வாங்கிவரப் போனவன் கடையண்டையிருந்து என்னவென்று உங்களோடு சொன்னான்?

பிரயாணிகர் — செட்டியார் கொடுக்க மாட்டேன் என்கிறார் என்று சொன்னான்.

நியாயாதிபதி — அதைக் கேட்டு நீங்கள் என்ன சொன்னீர்கள்?

பிரயாணிகர் — குளத்தண்டை இருந்தபடியே செட்டியாரைக் கூப்பிட்டு, 'கொடும், கொடும்' என்று சொன்னோம்.

நியாயாதிபதி — வெற்றிலைப்பாக்குக் கொடும் என்று சொன்னீர்களா? 'கொடும், கொடும்' என்று சொன்னீர்களா?

பிரயாணிகர் — 'கொடும், கொடும்' என்று சொன்னோம்.

நியாயாதிபதி — நல்லது, முதலில் மூட்டையைச் செட்டியாரிடம் கொடுத்தபோது நீங்கள் என்ன சொன்னீர்கள்?

பிரயாணிகர் — நாங்கள் மூவரும் வந்துகேட்டால் மூட்டையைக் கொடும் என்று சொன்னோம்.

நியாயாதிபதி — 'சரி, நீங்கள் மூவரும் வந்து கேட்டால் செட்டியார் மூட்டையைக் கொடுக்கத் தடையில்லை, நீங்கள் போய் உங்களில் மூன்றாவது மனிதனை அழைத்து வாருங்கள்' என்றார்.

இதைக் கேட்ட இருவரும் வயிறு எரிந்து திரும்பிவிட்டார்கள். செட்டி உண்மை விளங்கிற்று என்று சந்தோஷித்து வீடு சேர்ந்தான்.

## 12. சகுனம்

ஓர் ஊரில் பிரபு ஒருவன் இருந்தான். அவன் மிகவும் பொருளாளி; அரசனுக்குச் சமமான அந்தஸ்து உடையவன். ஆனால் அவனுக்குக் கல்வி யறிவு கிடையாது; சொந்த புத்தியும் இல்லை; யார் எதைச் சொன்னாலும் நம்புவான்.

2. பணக்காரன் என்றெண்ணி அநேகர் அவனைக் காண வருவார்கள். வித்வான்கள், சாஸ்திரிகள், பாடகர்கள் முதலாகப் பலரும் வருவதுண்டு. அவர்களுக்கு அரைக்காசும் உதவான். ஜோசியன் வந்தால் சொந்தமாக அழைப்பான்; ஜாதகத்தைக் காட்டுவான்; தனக்கு எப்போது தனம் பெருகும் என்று கேட்பான். எடுத்த காரியமெல்லாம் இடையூறின்றி ஈடேறுங்காலம் எப்போது வரும் என்று கேட்பான். ஜோசியனும் சோர்வடையாமல், பிரபுவின் விருப்பம்போல் சொல்லிவிட்டு, பணத்தைப் பறித்துக்கொண்டு போய்விடுவான்.

3. இப்படி யிருக்கையில் ஒருநாள் ஜோசியன் ஒருவன் வந்தான். அவனுக்குச் சகுனமும் தெரியும். பிரபு அவனிடம் தன் ஜாதகத்தைக் காட்டிய பிறகு, நல்ல சகுனம் ஒன்று சொல்லும்படி கேட்டான். ஜோசியன், 'ஐயா! அதிகாலையில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருக்கக் கண்டால், அன்று அநேக காரியங்கள் கைகூடும்' என்றான். பிரபு அவனுக்கு நல்ல பரிசு கொடுத்தனுப்பினான்.

4. பிறகு, அந்தப் பிரபு காக்கையின் சகுனத்தைக் காணவேண்டும் என்று கருத்துக் கொண்டான். அவன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு,

'அதிகாலையில் இரண்டு காக்கைகள் ஒன்றாய் அமர்ந்திருக்கக் கண்டால், ஓடிவந்து என்னை எழுப்பு" என்றான். வேலைக்காரன் அதற்குச் சமயம் பார்த்திருந்தான். அதற்காக அவன் தினம் அதிகாலையில் எழுந்திருப்பது வழக்கம்.



5. ஒருநாள் இரண்டு காக்கைகள் ஜதையாக ஒரு மரத்தில் உட்கார்ந்திருப்பதை வேலைக்காரன் கண்டான். கண்டு, மிகவும் சந்தோஷங்கொண்டு, ஓடிச்சென்று, படுக்கையிலிருந்த பிரபுவை எழுப்பினான். பிரபுவும் சங்கதியை யுணர்ந்து, விரைந்து வந்து, மரத்தைப் பார்த்தான். அதற்குள் ஒரு காகம் பறந்து போய்விட்டது. ஒன்றுமாத்திரம்

உட்கார்ந்திருந்தது. பிரபு ஒற்றைக் காகத்தைக் கண்டு, கோபங்கொண்டு, 'ஏன் என்னை முன்னமே எழுப்பவில்லை?' என்று வேலைக்காரனை அடித்தான். அப்போது அந்த வேலைக்காரன், 'ஐயா! நான் இன்று அதிகாலையில் இரண்டு காக்கைகள்



ஒன்றாய் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அதற்குப் பலனாகத் தங்களிடம் அடியுண்டேன். தாங்கள் அதைக் கண்டிருந்தாலும் இப்படித்தானே ஏதாவது துன்பம் நேர்ந்திருக்கும்' என்றான். அதைக் கேட்கவே பிரபுவுக்குப் புத்தி வந்தது. அவன் தன் வேலைக்காரனைப் புகழ்ந்து பரிசு கொடுத்தான்.

## 13. ஆந்தை உபாத்தியாயர்

ஒரு காட்டில் ஓர் ஆந்தை யிருந்தது. அந்த ஆந்தைக்கு சுத்த ஞானி என்று பெயர். அது ஒரு பாடசாலை ஏற்படுத்திற்று. அப் பாடசாலையில் பறவைகளும், மிருகங்களும் படிக்க வந்தன. ஆந்தை அவைகளுக்குப் பாடம் கற்பித்து வந்தது.



2. இப்படிச் சில மாதம் வரையில் பாடசாலை நன்றாக நடைபெற்றது. ஒருநாள் உபாத்தியாயர் தமது மாணாக்கர்களைப் பரீக்ஷிக்கத் தொடங்கினார். பிள்ளைகள் எல்லாம் வரிசையாக இருந்தார்கள்;

உபாத்தியாயர் அவர்களைப் பார்த்து, கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

ஆந்தை—மாணுக்கர்களே! சந்திரன் ஏன் இரவில் பிரகாசிக்கிருன்?

வானம்பாடி—ஐயா! நான் இரவில் பாடும் இனிய பாடலைக் கேட்டுச் சந்தோஷம் அடையவும், குமுதம் முதலிய புஷ்பங்கள் மலரவும் சந்திரன் இரவில் பிரகாசிக்கிருன்.

ஆந்தை—சரி, முயலே! நீ என்ன சொல்லுகிருய்?

முயல்—ஐயா! பனிநீரைப் பானம் பண்ணுவதே எனக்கு வழக்கம். ஆகையால், விடியற்காலத்தில் பனிநீர் பசும் புல்லின்மேல் தங்கியிருப்பதற்காகச் சந்திரன் இரவில் பிரகாசிக்கிருன்.

ஆந்தை—சரிதான், நாயே! நீ என்ன கூறுகிருய்?

நாய்—ஐயா! என் எஜமானன் வீட்டில் களவாடத் திருடர்கள் இரவில் சுற்றித் திரிகிருர்கள். அவர்களை நான் கண்டறிந்து, கடித்துத் துரத்தச் சந்திரன் இரவில் பிரகாசிக்கிருன்.

ஆந்தை—சரி, சரி, ஜம்புகா! நீ என்ன நினைக்கிருய்?

ஜம்புகன்—ஐயா! நான் இர்வில் கோழிகளிருக்கும் கூட்டுக்கும், நண்டுகளிருக்கும் வளைக்கும் நன்ருய் வழியறிந்து செல்வதற்குச் சந்திரன் இரவில் பிரகாசிக்கிருன்.

ஆந்தை—மாணுக்கர்களே! நீங்கள் எல்லோரும் நன்ருய்ப் பாடம் படித்திருக்கிறீர்கள். சமயோசிதமாகப் பதில் சொல்லவும் அறிந்-

திருக்கிறீர்கள். இப்பொழுது உங்களில் ஒவ்வொருவரும் சொல்லிய விடையை உற்று யோசியுங்கள். சந்திரன் ஒன்றே; அது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக உதவுகின்றது. அதுபோலவே, ஊரில் நல்லவர் ஒருவர் இருந்தால் அவர் பலருக்கும் பலவிதமாகப் பயன்படுவார் என்பது இதனால் விளங்குகிறது.

---

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்-தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

## 14. வெண்ணிலா

1. வானகத்திலே உலவும் வெண்ணிலாவே-உன்றன்
வரலாற்றைச் சொல்லவேண்டும் வெண்ணிலாவே.

2. இரவினில்தோன்றுகிறாய் வெண்ணிலாவே-சிலநாள்
இல்லாதிருப்ப தென்ன வெண்ணிலாவே.

3. உன்னொளி குளிர்ச்சியாக வெண்ணிலாவே-உள்ள
உண்மையை யுரைக்கவேண்டும் வெண்ணிலாவே.

4. வட்டவடிவாகத்தோன்றும் வெண்ணிலாவே-உன்றன்
வடிவமது தானேசொல்வாய் வெண்ணிலாவே.

5. இருளையெல்லாம் போக்குகிறாய் வெண்ணிலாவே-உன்
இருளாய் இருப்பதென்ன வெண்ணிலாவே. [னில்



6. எவ்வளவு தூரத்தினில் வெண்ணிலாவே-நீ தான்
இருக்கிருயோ சொல்லவேண்டும் வெண்ணிலாவே.

7. பகலெல்லாம் எங்கேசெல்வாய் வெண்ணிலாவே-நீ
பதுங்கி யிருக்கின்ருயோ வெண்ணிலாவே.

8. நட்சத்திரங்களுக்கு வெண்ணிலாவே-நீ
நாயகனுய்த் தங்கினுயே வெண்ணிலாவே.

9. என்னைக்காணவருகின்ருய் வெண்ணிலாவே-நான்
உன்னைக்காண வரலாமோ வெண்ணிலாவே

10. பால்போலக்காய்ந்துவரும் வெண்ணிலாவே-குளிர்
பனியும் உன்றனுலுண்டாமே வெண்ணிலாவே.

11. பூரணமாய் நீயும்வந்தால் வெண்ணிலாவே-கடல்
போங்குவதும்ஏனுேசொல்வாய் வெண்ணிலாவே.

12. உலகம் முழுவதுக்கும் வெண்ணிலாவே-நீ
உள்ளவன் ஒருவன்தானுே வெண்ணிலாவே.

## 15. நாயும் ஞானியும்

ஒரு நாய் வீதியில் உட்கார்ந்திருந்தது. அதைக் கண்ட ஞானி ஒருவர், அதைச் சுற்றிவந்து கை குவித்துக் கும்பிட்டார். அங்கே இருந்த மனிதர் சிலர் அதைக் கண்டார்கள். அவர்களில் குருவன்



என்பவன் முன்வந்து, ஞானியாருக்கு நமஸ்காரம் செய்து, சில விஷயங்கள் கேட்க ஆரம்பித்தான். மற்றவர்களும் அதைக் கருத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

குருவன் — சுவாமீ! தாங்கள் உயர்வாகிய மனிதப் பிறப்பை அடைந்திருக்கிறீர்கள். அதிலும் பெரியோராக விளங்குகிறீர்கள். நாயோ ஒரு மிருகம்; மிருகங்களில் மிகவும் இழிவானது. இதைத் தாங்கள் ஏன் வணங்குகிறீர்கள்?

ஞானி — ஐயா! எந்தப் பொருளையும் அதன் உருவைக் கண்டு மதிக்கக்கூடாது, அதன் குணத்தைக் கண்டே மதிக்கவேண்டும்.

குருவன் — சுவாமீ! நாயினிடத்தில் என்ன நற்குணம் இருக்கிறது? அதற்கு நற்குணம் இருந்தால், மனிதர்கள் ஏன் அதை எப்பொழுதும் இழிவாகக் கூறுகிறார்கள்?

ஞானி — ஐயா! எந்தப் பொருளிலும் நல்ல குணமும் உண்டு, கெட்ட குணமும் உண்டு. நல்லவர்கள் பிறரிடத்தில் இருக்கும் நல்ல குணத்தையே நாடுவார்கள். தீயவர்கள் பிறரிடத்துள்ள நல்ல குணத்தை நாடாமல், கெட்ட குணத்தைத் தேடிப் பிடித்துத் தூற்றுவார்கள்.

குருவன் — சுவாமீ! நாயினிடத்தில் என்ன நற்குணம் இருக்கிறது?

ஞானி — ஐயா! நாயினிடத்தில் பல நற்குணங்கள் உண்டு. அவற்றுள் மூன்று குணங்கள் மிக முக்கியமானவை.

குருவன் — தயை செய்து அவற்றை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும், சுவாமீ!

ஞானி — ஐயா! (1) நாயை வளர்ப்பவன் தான் உண்டு மிகுந்த எச்சில் சோற்றை அதற்கு இடுகிறான். அதை அந்த நாய் மிகவும் விருப்பத்தோடு உண்டு, அவன் வீட்டை அகலாமல் இருந்து, இரவும் பகலும் காவல் காக்கிறது.



(2) நாய், தன் எஜமானன் எத்தனை ஆயிரம்பேர் கூடிய சபையில் இருந்தாலும், அவனைத் தெரிந்துகொண்டு அவனையே அடைகிறது. அவனைப்போலவே உருவமும் உடையும் உடையவர்கள் பலர் அங்கே இருந்தாலும் அது தப்புவதில்லை.

(3) நாய், தன் எஜமானன் என்ன கட்டளையிட்டாலும் தடையின்றிச் செய்கிறது. ஒரு பொருளைக் கடலில் எறிந்து விட்டு, அதை

எடுத்துவர ஏவினாலும் நீந்தி எடுத்துவரும். அவன் ஒரு புலியைக் காட்டி, அதன்மேல் பாய் என்றாலும் உடனே பாயும்; தன் உயிருக்குக் கெடுதிவரும் என்பதையும் எண்ணுவதில்லை. இவ்வளவு எஜமான விசுவாசமுடையது நாய். அதனால், நாய் மனிதனைவிட மேலான குணமுடையது என்று சொல்லலாம்.

குருவன் — சுவாமீ ! இதனால் நாய் மனிதனைவிட எப்படி மேலானதாகும் ?

ஞானி — ஐயா ! கடவுள் நமக்கு எல்லாப் பொருள்களையும் கொடுத்து ரக்ஷிக்கிறார் ; எப்போதும் காப்பாற்றுகிறார். அப்படிப்பட்ட பரம பிதாவை, நாம் சதா நினைக்கிறோமா ? அவர் இன்னார் என்று தெரிந்து கொள்ளுகிறோமா? அவரிட்ட கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறோமா ? யோசித்துப் பாரும்.

குருவன் — இல்லை, இல்லை, சுவாமி! தேவரீர் சொல்லியவைகள் சரியே. இப்போதுதான் எங்களுக்குப் புத்தி வந்தது. இதற்காகத் தங்களுக்கு வந்தனம் செலுத்துகிறோம். நாங்கள் தெரியாமல் கொடுத்த சிரமத்திற்காக எங்களை மன்னிக்க வேண்டும்.

ஞானி — அப்படியே ஆகட்டும், ஆசீர்வாதம், போய் வாருங்கள்.

## 16. நாய்

நன்றியுள்ள உயிரேது-நாயைப்போல
நன்றியுள்ள உயிரேது

1. வளர்ப்பவ ரிடத்தினில் அன்பு வைத்து
வாலை யாட்டிக் காட்டும் தெம்பு-மிக
உளத்திற் கோபமானால் முன்பு-பல்லை
உறுமிக் காட்டுமிதை நம்பு (நன்றி)

2. நாக்கைத் தொங்கவிட் டோடும்-வேறு
நாயைக் கண்டால் சண்டை போடும்-நம்
வாக்கின்படி நடக்க நாடும்-தீனி
வயிற்றுக் கில்லாவிட்டால் வாடும் (நன்றி)

3. பத்திரமாய் வீட்டைக் காக்கும்-திருட்டுப்
பாதகரைக் குரைத்துப் போக்கும்-வாயில்
சித்தமாக விளக்கைத் தூக்கும்-வழியில்
சேருந் துன்பங்களை நீக்கும் (நன்றி)

4. ஆட்டு மந்தைகளை மடக்கும்-அதை
அகலாமல் இரவில் கிடக்கும்-ஒன்றும்
ஓட்டங் கொள்ளாமலே அடக்கும்-இடைய
னுடனே துணையாய் நடக்கும் (நன்றி)

5. காலத்தில் இரைதின்ன நாட்டம்-எலும்பு
கடித்திடவே கொண் டாட்டம்-பசிக்
காலத்தில் கொடுத்திட்டால் ஊட்டம்-ஒரு
காவலும் செய்யாதிருட் டாட்டம் (நன்றி)

6. நாயை வீணை யடிக்காதே - அன்பாய்
நடத்தினை லுனைக் கடிக்காதே-நீரை
வாயாலுறிஞ்சிக் குடிக்காதே-அது
வஞ்சனையாய் நடிக்காதே (நன்றி)

## 17. நரியும் நண்டும்

ஒரு காட்டில் கிழ நரி ஒன்று இருந்தது அது தினந்தோறும் தனக்கு வேண்டிய இரையைத் தேட முடிவதில்லை. அதனால், அது ஒரு தந்திரம் செய்யத் தீர்மானித்தது.

2. அந்த நரி ஓர் ஏரிகரையில் இருந்த ஒரு பெரிய கல்லின்மேல் உட்கார்ந்து, ஊளையிட்டு அழ ஆரம்பித்தது. அது பெருங் குரலெடுத்து நெடுநேரம் அழவே, அங்கிருந்த ஒரு நண்டு வெளியே வந்து, நரியைப் பார்த்து, 'நரியாரே! ஏன் இப்படி அழுகிறீர்?' என்று கேட்டது.

நரி — 'ஐயா! நான் யாருமற்ற பாவியாய் இங்கே இருக்கிறேன்' என்றது.

நண்டு — 'ஏன், உம்முடைய இனத்தார் இல்லையா?' என்று கேட்டது.

நரி — 'என் இனத்தார் என்னைச் சேர்க்கமாட்டோம் என்கிறார்கள்' என்றது.

நண்டு — 'ஏன் சேர்க்கமாட்டோம் என்கிறார்கள்?' என்று கேட்டது.

நரி — 'ஐயா! நான் மிகவும் ஜீவகாருண்ய முள்ளவன். என் இனத்தார் ஒன்றுகூடி, நண்டுகளை யெல்லாம் பிடித்து நாசம் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். அதைக் கேட்க என் மனம் தாளவில்லை. அதனால் நான் எழுந்து, 'அப்படிச் செய்வது நமக்கு அடாது; நண்டுகள் மிக அழகான பிராணிகள்' என்று நியாயம் சொல்லி மறுத்தேன். அதன்பொருட்டு மற்ற நரி-

கள் என்மேல் விரோதங் கொண்டு என்னை நீக்கிவிட்டன. அதனால், நான் திக்கற்ற பாவியாய்த் தனியே நின்று அழுகிறேன்' என்றது.



நண்டு — 'ஐயா, நரியாரே! எங்களுக்காக உம்முடைய இனத்தாரை நீர் விரோதம் செய்து கொண்டீர். ஆகையால், இனி நீர் எங்களோடு இருந்து காலந் தள்ளும். ஏதோ எங்களுக்குக் கிடைக்கும் உணவை வஞ்சனையின்றி உமக்குங் கொடுக்கிறோம்' என்றது.

நரி — 'நீர் சம்மதித்தால் உம்முடைய இனத்தவரெல்லாம் என்னைச் சேர்த்துக்கொள்ள ஒப்-

173459

புவார்களா? உமக்கு உள்ள இரக்கம் மற்றவர்களுக்கும் இருக்குமா?' என்றது.

நண்டு — 'உமக்கேன் அந்தக் கவலை? நான் சொல்லி அவர்களைச் சரிப்படுத்திக் கொள்ளுகிறேன். என் சொல்லை அவர்கள் மீறமாட்டார்கள்' என்றது.

173459

3. பிறகு, அந்த நண்டு போய், நடந்த விஷயங்களைத் தன் இனத்தாருக்குச் சொல்லி, அழைத்துக்கொண்டு வந்து, அவைகளுக்கு நரியைக் காட்டிற்று. மற்ற நண்டுகளும் நரியைக் கண்டு, இரக்கங்கொண்டு, அதன்மேல் அன்பு பாராட்டின. நரி குதித்துக் குதித்து விளையாடி, அந்த நண்டுகளுக்கு வேடிக்கை காட்டிற்று; அதை நண்டுகள் கண்டு ஆனந்தம் அடைந்தன.

4. ஒருநாள் பௌர்ணமி வந்தது. அன்று இரவு பூர்ண சந்திரன் பால்போல் காய்ந்தது. அப்போது நரி நண்டுகளைப் பார்த்து, 'என் அரிய நண்பர்களே! நீங்கள் எப்போதாவது நிலா வெளிச்சத்தில் வெளியேபோய், உலாவி வந்ததுண்டா?' என்று கேட்டது. நண்டுகள், 'நண்பரே! நாங்கள் எப்படி வெளியே போவோம்; போனால் உங்கள் இனத்தவர் எங்களைப் பிடித்து நாசஞ் செய்துவிடமாட்டார்களா?' என்றன. அதன்மேல் நரி, 'நான் இருக்கிறேன் வாருங்கள், யாராவது வந்தால் நான் ஒரு கை பார்க்கிறேன்; நிர்ப்பயமாக வாருங்கள்' என்றது. நரியின் சொல்லைக் கேட்டு நண்டுகள் எல்லாம் வெளிப்பட்டன.

5. நரி, இதுவே சமயமென்று எண்ணி, மெதுவாக நண்டுகளை அழைத்துக்கொண்டு வெட்ட-

வெளியான இடத்திற்குப் போய்விட்டது. சுற்றுப் பக்கத்தில் எங்கும் நீர்நிலை இல்லை. அது கண்ட நரி, பெருங் குரலெடுத்து ஊளையிட்டது. நாலா பக்கங்களிலுமிருந்து நரிகள் எல்லாம் ஓடிவந்தன. நண்டுகள் தப்பியோட முடியவில்லை. அதனால், நரிகள் நண்டுகளைப் பிடித்துத் துண்டு துண்டாகக் கடித்துத் தின்றன.



6. பிறகு, கிழ நரி தான் செய்த தந்திரத்தை மற்ற நரிகளுக்குச் சொல்ல, மற்ற நரிகள், அதன் சிரமத்திற்குப் பரிகாரமாக நாள்தோறும் அதற்கு உணவு கொடுப்பதாக ஒப்புக்கொண்டன.

## 18. சாயம் வெளிப்பட்டது

காட்டு இலாகா உத்தியோகஸ்தன், ஒரு காட்டில் மரங்களுக்கு முத்திரை போடச் சாயச் சட்டியை எடுத்துக்கொண்டு போனான். அவன் சில மரங்களுக்கு முத்திரை போட்ட பிறகு, சாயச் சட்டியை ஒரு மரத்தின் கீழ் வைத்து விட்டு, சாப்பிடப் போனான்.

2. அவன்போன சிறிது நேரத்திற்குள் ஒரு நரி அங்கே வந்தது. அது சட்டியில் ஏதோ இருக்கும் என்றெண்ணி, அருகில் வந்து, அதில் தன் தலையை யிட்டுச் சாய்த்தது. சட்டி கவிழ்ந்து சாயமெல்லாம் நரியின்மேல் ஊற்றிக்கொண்டது. அது நீலச் சாயமானதால், நரியின் உடல்முழுதும் நீலமாய்விட்டது. நரி பார்த்து, நம்முடைய உருவம் முழுவதும் மாறி விட்டது. நம்முடைய ஜாதியாரும் நம்மைச் சேர்க்க மாட்டார்கள்; இனி இதற்கு ஒரு தந்திரம் செய்யவேண்டும் என்றெண்ணி, நரி அதுமுதல் ஊளையிடாமல் மவுனமாயிருந்து, தன் நடையையும் சிறிது மாற்றிக்கொண்டு பெருமிதமாக நடக்கத் தலைப்பட்டது.

3. உடையும் நடையும் மாறவே, ஒவ்வொரு மிருகமும் அதைப் பார்த்து அஞ்சுவ தாயிற்று. அது கண்ட நரி அதிக அகங்காரங் கொண்டது. சிங்கத்தைப் பார்த்தாலும் தீரமாகச் செல்ல ஆரம்பித்தது. நரியின் தன்மையைக் கண்ட சிங்கமும் பயந்து, 'இது எது புதுமையாக இருக்கிறது!' என்று அடங்கி ஒடுங்கி இருந்தது. நரி, உடனே அந்தச் சிங்கத்தின்மேல் ஏறிக்கொண்டு, சுற்றுப் பிரயாணம் செய்யத் தலைப்பட்டது. மிருகேந்திர-



ஞான சிங்கமே வாகனமானதைக் கண்டு, மற்ற மிருகங்கள் எல்லாம் அச்சத்துடன் அதற்கு அடங்கி நடக்க ஆரம்பித்தன.

4. 'தேளுக்கு அதிகாரம் வந்தால் நாழிக்கு ஒருதரம் கொட்டும்' என்பதுபோல், நரி வீண் அதிகாரம் செய்யத் தலைப்பட்டது. தன் ஜாதியாரைக் கண்டால் பின்னும் கொஞ்சம் பெருமை பாராட்ட ஆரம்பித்தது. அதனால் நரிகள் அதன் திருட்டுத் தனத்தைக் கண்டுபிடிக்க எண்ணங் கொண்டன. பிறகு அவை, மற்ற மிருகங்களை ஒன்று கூட்டி, 'எவனோ ஒருவன் இப்போது வந்து அதிகாரம் செலுத்துகிறான்; அவன் இன்னானென்று நமக்குத் தெரியவில்லை. இப்படியே அவனை விட்டு விட்டால், அனர்த்தம் விளையும்போல் காண்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டன.

5. அதன்மேல் குரங்கு எழுந்து, 'நண்பர்களே! அவன் உருவத்தில் நரியை ஒத்திருக்கின்றான். நிறம் மாத்திரம் வேறுபட் டிருக்கிறது, வாயைத் திறந்தால் உள்ளது வெளிப்படும். அவனோ, "மவுனம் கலகம் நாஸ்தி" என்று இருக்கிறான்' என்றது.

6. அதைக்கேட்ட ஒரு கிழ நரி சற்று யோசித்து, 'ஐயா! நீர் சொல்வது சரிதான். பார்வைக்கு அப்படித்தான் இருக்கிறான். எங்களைக் கண்டால் எலியைக் கண்ட பூனையைப்போல் காய்கிறான். இருக்கட்டும், சித்திரை வைகாசி மாதங்களுக்கு வசந்த காலம் என்று பெயர். அந்தக் காலத்தில் ஓர் இரவில் புதிதாக ஒரு நக்ஷத்திரம் உதிக்கும். அந்த இரவு முழுதும் நரிகளெல்லாம் ஊளையிட்டே தீரவேண்டும். இல்லாவிட்டால் உடலிலுள்ள மயி-



ரெல்லாம் உதிர்ந்துவிடும். ஆகையால், அதுவரையில் பார்ப்போம்' என்றது. அதைக் கேட்ட மற்ற மிருகங்கள் அந்தத் தினத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தன.

7. வசந்த காலம் வந்தது. வானத்தில் புதிய நக்ஷத்திரமும் முளைத்தது. நரிகளெல்லாம் ஊளையிடத் தலைப்பட்டன. எங்குள்ள நரியும் இரைச்சலிட ஆரம்பித்தது. சாயமேற்றிக்கொண்ட ஜம்புகன் சும்மா இருக்கச் சாத்தியப்படவில்லை; சும்மா இருந்தால், உரோமமெல்லாம் உதிர்ந்துவிடும். இதற்கு என்ன செய்வது. உரோமம் உதிர்ந்துவிட்டால் உள்ள விஷயம் வெளியாய்விடும் என்று நினைத்து, முடிவில் தானும் ஊளையிடத் தலைப்பட்டது. சமயம் பார்த்துக்கொண்டேயிருந்த மிருகங்கள் எல்லாம் ஒன்று திரண்டு ஓடி, சிங்கத்திற்குத் தெரிவித்தன. சிங்கம் கோபாவேசத்துடன் ஓடிவந்து, நரியை ஓர் அறை அறைந்தது. சுஜாதி அபிமானமில்லாத நரி ஒரே அறையில் உயிரிழந்தது. அதைக் கண்டு மற்ற மிருகங்கள் அகமகிழ்ந்து, பழமைபோல் வாழ்ந்திருந்தன.

---

1. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
2. உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்.
3. எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்.
4. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.
5. யாரால் கெட்டேன் நோரால் கெட்டேன்.
6. மூடிமறைத்தாலும் முட்டாள் வெளியாவான்.
7. பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான்.
8. அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.

## 19. சிறுவனுக்கிருந்த சிறந்த புத்தி

ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் சின்னப்பன். அவனுடைய பெற்றோர் அவனைப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். அவன் பாடசாலைக்குப் போகாமல், சோம்பேறிகளோடு சேர்ந்து, தெருத்தெருவாய் விளையாட ஆரம்பித்தான்.



2. சின்னப்பனுக்குக் கல்வியறிவு இல்லாவிட்டாலும், கூர்மையான புத்தியுண்டு. அவன் எதைச் சொன்னாலும் யுக்தியாகச் சொல்லுவான். அவனுடைய அருமையான புத்தியைக் கண்டு பலரும் புகழ்ந்து பேசுவார்கள். 'இந்தப் பையனுக்குக்

கல்வி யறிவும் இருந்தால், இவனை வெல்ல ஒருவராலும் முடியாது' என்பார்கள்.

3. சின்னப்பன் விஷயத்தை யாவரும் சிறப்பாகப் பேசவே, அது அவ்வூர் நபாபுவின் காதுக்கும் எட்டிற்று. அந்த நபாபு அதன் உண்மையைச் சோதிக்க விரும்பினான். ஒரு நாள் நபாபு தன் மந்திரியுடன் வேட்டைக்குப் போய்த் திரும்பி வந்தான். வரும் வழியில் சின்னப்பன் தன் சிநேகிதரோடு விளையாடிக்கொண்டு இருந்தான். அதைக் கண்ட மனிதர் சிலர் அவனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

4. அந்த வழியாக வந்த நபாபுவுக்கு, மந்திரி அப் பையனைச் சுட்டிக் காட்டினான். நபாபு அதுவே சமயமென்று அவன் புத்தியைப் பரீக்ஷிக்க எண்ணினான். உடனே மந்திரி அந்தப் பையனை அருகில் வரவழைத்தான்.

நபாபு — பிள்ளாய்! நான் ஒரு விஷயம் கேட்கிறேன்; அதற்கு ஏற்றபடி பதில் சொல்லுகிறாயா?

சின்னப்பன் — ஆண்டவரே! என்னால் கூடியவரையில் பதில் சொல்லுகிறேன்.

நபாபு — யார் என்ன கேட்டாலும், நீ வெகு திறமையாகப் பதில் சொல்லுவது வழக்கமாமே?

சின்னப்பன் — எல்லாம் தங்கள் ஆசீர்வாதந்தான்.

நபாபு — நல்லது இருக்கட்டும், இதோ என் இடது கையில் ஒரு புறாவைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்; வலது கையில் கத்தி இருக்கி-

றது. நான் இந்தப் புறுவை வெட்டுவேனோ? வெட்டமாட்டேனோ? சொல் பார்ப்போம்.

சின்னப்பன் — ஆண்டவரே! தாங்கள் அதை வெட்டமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

நபாபு — வெட்டமாட்டேனு! இதை நன்றாய்ப் பார். இப்போது சொல், வெட்டுவேனு? வெட்டமாட்டேனு?



சின்னப்பன் — ஆண்டவரே! இப்போதும் சொல்லுகிறேன், தாங்கள் அதை வெட்டவேமாட்டீர்கள்.

5. நபாபு, அந்த உறுதி வார்த்தையைக் கேட்டவுடனே, வெகு ஆத்திரத்தோடு ஓங்கி ஒரு

வெட்டு வெட்டினன். அந்த வெட்டு குறி தப்பி, புறாவைப் பிடித்திருந்த கையின் பெரு விரலின்மேல் விழுந்தது. நபாபு திடுதிடுத்துப் புறாவை விட்டு-விட்டான். எமன் கையிற்பட்ட புறா, இன்னல் ஒழிந்து, இன்பம் அடைந்து, பறந்து போய்-விட்டது.

6. பிறகு, நபாபு அந்தச் சிறுவன் புத்தியை வியந்து, அவனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போய், தன் அரண்மனையில் வைத்துக்கொண்டு கல்வி கற்பித்தான். அவனும் அதுமுதல் நன்றாய்ப்-படித்து வித்துவானானன்.

---

1. இளமையிற் கல்.
2. வித்தை விரும்பு.
3. எண்ணெழுத் திகழேல்.
4. எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.
5. கற்கை நன்றே கற்கை நன்றே.
   பிச்சை புகினும் கற்கை நன்றே.
6. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்,
   நெல்லினுட் பிறந்த பதராகும்மே.
7. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்,
   அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பார்.
8. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.



## 20. பிள்ளை வழக்கு

இடம் — நியாய ஸ்தலம்.
வாதி — ஞானம்பாள்.
பிரதிவாதி — சித்திராங்கி.

சேவகன் — (கூப்பிடுகிறான்) வாதி, ஞானம்பாள்! வாதி ஞானம்பாள்!

ஞானம்பாள் — ஐயா! இதோ வந்தேன்.

சேவகன் — (கூப்பிடுகிறான்) பிரதிவாதி, சித்திராங்கி அம்மாள்! பிரதிவாதி சித்திராங்கி அம்மாள்!

சித்திராங்கி — இதோ வந்தேன்.

குமஸ்தா — (ஞானம்பாளைப் பார்த்து) அம்மா! நான் சொல்லுகிறபடி சொல்லு. 'சர்வசக்தி யுள்ள சுவாமி முன்பாக, நான் சொல்லுவது எல்லாம் நிஜம், நிஜம் தவிர வேறில்லை'

(ஞானம்பாள் கூடவே சொல்லுகிறாள்.)

அரசன் — (ஞானம்பாளைப் பார்த்து) அம்மா! உன்னுடைய வழக்கென்ன?

ஞானம்பாள் — துரையே! நாங்கள் இருவரும் இவ்வூர் சத்திரத்தில் வந்து தங்கி ஒரு வாரம் ஆகிறது; எனக்கு ஒரு குழந்தையும் அந்தம்மாளுக்கு ஒரு குழந்தையும் உண்டு. இரண்டு குழந்தைகளும் ஏறக்குறைய ஒரே மாதத்தில் பிறந்தவை. நேற்று இரவு சித்திராங்கியம்மாளுடைய குழந்தை திடீரென்று இறந்துவிட்டது. உடனே அந்தம்மாள் ஓடி வந்து என் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, இறந்தது என் குழந்தை யென்றும், இருப்பது தன் குழந்தை யென்றும் சாதிக்கிறாள்.

இதுதான் வழக்கு. தரும துரையாகிய தாங்கள் விசாரித்து என் குழந்தையை எனக்குச் சேர்ப்பிக்க வேண்டுகிறேன்.

அரசன் — நீங்கள் ஏன் இவ்வூருக்கு வந்தீர்கள்?

ஞானம்பாள் — நாங்கள் யாத்திரை காரணமாக இங்கே வந்தோம்.

அரசன் — உங்கள் ஊர் இங்கிருந்து எத்தனை நாள் பிரயாணம் இருக்கும்?

ஞானம்பாள் — சுமார் இரண்டு மாதப் பிரயாணம் இருக்கும்.

அரசன் — உங்கள் புருஷன்மார் எங்கே?

ஞானம்பாள் — அவர்கள் எங்களைச் சத்திரத்தில் தங்க வைத்து, ஒரு வாரத்தில் வருவதாகச் சொல்லி வெளியே போனார்கள்.

அரசன் — சித்திராங்கி யம்மாள் உனக்கு என்ன வேண்டும்?

ஞானம்பாள் — அந்தம்மாள் எங்களுக்கு உறவல்ல; சிநேகிதம்.

அரசன் — சரி, போய் வெளியில் இரு.

குமஸ்தா—(சித்திராங்கியைப் பார்த்து) நான் சொல்லு-கிறபடி சொல்லு. 'சர்வ சக்தியுள்ள சுவாமி முன்பாக, நான்சொல்லுவது எல்லாம் நிஜம், நிஜம் தவிர வேறில்லை'(கூடவே சொல்லுகிறாள்.)

அரசன் — (சித்திராங்கியைப் பார்த்து) அம்மா! உன் வழக்கு என்ன?

சித்திராங்கி — துரையே! இராத்திரி ஞானம்பாளு-டைய குழந்தை இறந்துவிட்டது. அதைக்

கொண்டுவந்து என்னிடத்தில் போட்டுவிட்டு, உயிரோ டிருக்கும் என் குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டு, அதைத் தன்னுடையது என்கிறாள். இறந்த குழந்தை அவளுடையது, உயிரோ டிருக்கும் குழந்தை என்னுடையது; நான் இதைக் கொடுக்கமாட்டேன்.

அரசன் — அப்படியா! சரி, இருக்கட்டும்.

(விருத்தம்)

மந்திரீ இங்கு வந்த வழக்கினுக் கேற்ற சாட்சி [ளால்
சொந்தமாய் சொல்வோரில்லை தூதனைக் கொண்டு வா
இந்தநற் குழந்தை தன்னை இரண்டு துண்டாக வெட்டி
தந்திடும் இருவருக்கும் தட்சணம் தடைசெய் யாதீர்.

சித்திராங்கி — (சந்தோஷமடைந்து பாடுகிறாள்)

அதுவேசரி அதுவேசரி அதுவேசரி துரையே
பொதுவாகவே அதுவேசரி புரிந்தாலது முறையே
அநியாயமா யுரையாமலே அறைந்தீர்மிகு பரிவாய்
இனியாதொரு குறையேயிலா திருப்போமது புரிவாய்.

ஞானம்பாள் — (அகவல்)

தருமநற் றுரையே தயவாய்க் கேளும்
உரிமையாய் என்றன் உளம்பதைக் கின்றது
வேண்டா வேண்டா வெட்டவே வேண்டா
ஆண்டவ ரேயும் அடிகளில் வீழ்வேன்
அந்தநற் குழந்தையை அவளுக் கேகொடும்
எந்த விதத்திலும் இருந்தால் போதும்
உயிரோ டிருந்தால் உற்ற என் குழந்தையைக்
கையினி லேந்திக் காப்பாற் றமல்
ஒழியினும் என்றன் உள்ளங் குளிர
விழியினற் கண்டு மேவுவேன் இன்பம்
அதனல் என்றன் அரிய குழந்தையைப்

பதமாய் வைத்துப் பாதுகாத்திடவே
அந்தச் சித்திர அம்மாள் தனக்கே
சொந்தமாய்க் கொடுத்திடும் துரையே வந்தனம்.

அரசன் — மந்திரீ! இவர்கள் இருவரும் சொன்ன வாக்கு மூலத்தால் என்ன ஏற்படுகின்றது?

மந்திரி — விருத்தம்

மன்னரே இவர்கள் சொன்ன வாக்கு மூலத்தினாலே
சின்னநற் குழந்தைக்கான சிறந்ததாய் ஞானம்பாளே
பின்னிய இரக்க மின்றிப் பேசிய சித்திராங்கி
அன்னிய மாதே யாவாள் அதற்கொன்றும் ஐய மில்லை.

அரசன் — ஆமாம், 'அதுவேசரி' என்றவள் ஒரு வேசரியே; பெண் அல்ல. பெற்றவள் அறிவாள் பிள்ளை யருமை. அது ஞானம்பாளிடத்தில் நன்றாய் விளங்குகிறது. ஆதலால் (ஞானம்பாளைப் பார்த்து) அம்மா, ஞானம்பாள்! இந்தக் குழந்தை உன்னுடையதே என்று நியாய ஸ்தலத்தில் விளங்கிற்று. ஆகையால், நீ குழந்தையை எடுத்துக்கொள். சித்திராங்கி வீண் பழி போட்டு, பொய் சொன்னதினால், அவளுக்கு ஆறு மாதம் கடின காவல் விதித்திருக்கிறோம், போங்கள்.

[ஞானம்பாள் குழந்தையை எடுத்துக்கொண்டு சந்தோஷத்தோடு போகிறாள். சித்திராங்கியைச் சேவகர் சிறைச்சாலைக்குக் கொண்டு போகிறார்கள்.]

சித்திராங்கி — ஐயோ, என் விதியே! என்ன செய்வேன்! பொறாமையினால் மதிமயங்கிப் பொய் பேசினேனே; அதற்குப் பலனாகக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான்.

[சிறைச்சாலையை அடைகிறாள்.]

## 21. மந்திரியின் தந்திரம்

பூர்வ காலத்தில் நமது இந்தியா தேசத்தை மகம்மதிய அரசர் பலர் ஆண்டு வந்தார்கள். அவர்களில் சுல்தான் மாமூது என்பவன் ஒருவன். அவன் மிகவும் கல்நெஞ்ச முடையவன்; திடீரென்று நகரங்களில் புகுந்து கொள்ளை யாடுவதில் மிகவும் விருப்பம் உடையவன். அவன் காலத்தில் அவனுடைய படை வீரர்கள், கண்ட கண்ட நகரங்களில் புகுந்து, நாசஞ் செய்யத் தலைப்பட்டார்கள்.

2. இந்த அநியாயத்தைக் கண்டு, ஜனங்கள் ஓடி, காட்டில் ஒளித்துக் கொள்ள முயன்றார்கள். 'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின், கடும்புலி வாழும் காடு நன்றே' என்று பலரும் கூறுவார்கள். அந்த அரசனுக்குத் தன் செய்கை விளையாட்டாக இருந்தது. அது மந்திரிக்கும் சம்மதமில்லை. இந்த விஷயமாக சுல்தானுக்கு நற்புத்தி கற்பிக்கவேண்டுமென்று மந்திரி எண்ணியிருந்தான்.

3. ஒரு நாள் சுல்தான் தன் மந்திரியோடு வேட்டைக்குச் சென்றான். அன்று பகலெல்லாம் நன்றாய் வேட்டையாடி, பொழுது சாய்ந்ததும், இருவரும் நகருக்குத் திரும்பினார்கள். மாலைப் பொழுதானதால் பக்ஷிகள் எல்லாம் ஒன்றுகூடி கூவிக் களித்துக்கொண்டு இருந்தன. அதைச் சுல்தான் கண்டு, 'இந்தப் பக்ஷிகள் ஏன் இவ்வாறு இரைச்ச லிடுகின்றன' என்று மந்திரியைக் கேட்டான். மந்திரி சுல்தானுக்குப் புத்தி கற்பிக்க இதுவே ஏற்ற தருணமென்று எண்ணி, 'அரசே! இந்தப் பக்ஷிகள் ஒன்றுக்கொன்று க்ஷேமங்களை

விசாரித்துக் கொள்ளுகின்றன' என்றார். சுல்தான், 'அவை க்ஷேமத்தை விசாரிக்கின்றன என்று உமக்கு எப்படித் தெரியும்? சண்டை யிடுகின்றன என்றால் ஆகாதோ?' என்றான். மந்திரி, 'அரசே!



நான் பக்ஷிகளின் பாஷைகளைப் பலநாள் பழகி அறிந்திருக்கிறேன். அதனால், அவை பேசிக்கொள்வதை உணர்ந்து தங்களுக்குத் தெரிவித்தேன்' என்றான்.

4. மந்திரி இவ்வாறு சொல்லியும் சுல்தானுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இருவரும் சிறிது தூரஞ் செல்லுகையில், இரண்டு ஆந்தைகள் ஒரு



மரத்தின் கிளையில் உட்கார்ந்து கிளை கூட்டிக்கொண்டு இருந்தன. அதைக் கேட்ட சுல்தான், மந்திரியைப் பார்த்து, 'இந்த ஆந்தைகள் என்ன பேசிக்-

கொள்ளுகின்றன? சொல்லும் பார்ப்போம்' என்று கேட்டான். உடனே மந்திரி, 'அரசே! இந்த ஆந்தைகள் பேசிக்கொள்ளும் விஷயம் தங்களுக்குத் தெரிவிக்கக் கூடியதாக இருக்கவில்லை; மஹாராஜா மன்னிக்கவேண்டும்' என்றான். 'அதென்ன அப்படிப்பட்ட விஷயம்? எதுவானாலும் சொல்லியே தீரவேண்டும்' என்றான் சுல்தான்.

5. மந்திரி, 'அரசே! இந்த இரண்டும் ஆண் ஆந்தைகள். ஓர் ஆந்தைக்கு ஆண் பிள்ளையும், மற்றொன்றுக்குப் பெண் பிள்ளையும் இருப்பதாகத் தெரிகிறது; பெண்ணின் தகப்பன், தன் பெண்ணை மற்ற ஆந்தையின் பிள்ளைக்குக் கட்டிக்கொள்ளும்படி கேட்கிறது. அதற்கு, பிள்ளையின் தகப்பன், "அழிந்துபோன ஐந்து கிராமங்கள் சீதனமாகக் கொடுப்பதானால் உன் பெண்ணை என் பிள்ளைக்குக் கட்டிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லுகிறது. அதற்குப் பெண்ணின் தகப்பன், "இதுதானா, நமது அரசராகிய சுல்தான் மாமூது இருக்கிறவரையில் அழிந்த கிராமங்களுக்குக் குறைவென்ன! ஐந்நூறு கிராமங்கள் வேண்டுமானாலும் கொடுக்கத் தடையில்லை" என்று சொல்லுகிறது' என்றான்.

6. இந்த விஷயத்தைக் கேட்ட சுல்தான் வெட்கமடைந்து, தலைகுனிந்து சும்மா இருந்தான்; பிறகு இருவரும் அரண்மனையை அடைந்தார்கள். அதுமுதல் சுல்தான் நற்புத்தியடைந்து, நீதியோடு அரசு புரிந்து வந்தான். குடிகளெல்லாம் மந்திரியைப் புகழ்ந்து வாயார வாழ்த்தினார்கள்.

## 22. விடு கதைகள்

1. அடி சிவப்பு, நடு பச்சை, உச்சி வெள்ளை
அன்புடனே இக்கதையை அறைகுவாயே.

2. அப்பன் சொரியன், ஆத்தாள் சடைச்சி,
அவர்கள் பிள்ளை சர்க்கரைக் குட்டி.

3. நெருப்பிலே பிறந்து, நீரிலே மூழ்கி,
வாயிலே வந்து, வானத்திலே போவார்
[இவர் யார்?

4. காலையில் கோட்டை கட்டி,
கடும்பகலில் யுத்தஞ் செய்து,
மாலையில் விரித்துப் போடும்,
மரவீரன் யார்? சொல்வாயே.

5. உருண்டை வடிவாயிருக்கும் உலகமல்ல;
உடல்முழுதும் ரோமமுண்டு குரங்குமல்ல;
உச்சியினில் குடுமியுண்டு மனிதனல்ல;
உருள்விழிகள் மூன்றுண்டு சிவனுமல்ல;
உண்மையுடன் இக்கதையை உரைத்திடீரே.

6. கிண்ணம்போலே பூ பூக்கும்;
கிடாரம்போலே காய் காய்க்கும்;
வண்ணமாக வாங்கி யதை
வகுத்தால் நட்சத்திரம் காணும்;
எண்ணுந்தோறுஞ் சுவை யதற்கு
இனிப்பேயுண்டு; இதன் பெயரை
திண்ணமாக உரைப்பவரே
சிறந்த புத்தி யுடையவரே.

## 23. போனவன் வந்தான்

ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவருக்குப் பரமானந்த குரு என்று பெயர். அவர், பேருக்கு குருவேயன்றி, பிறருக்கு உபதேசிக்கும் குரு அல்ல. அவருக்கு மூடன், முட்டாள், மட்டி, மடையன் என்று நான்கு சீஷர்கள் இருந்தார்கள். அந்தக் குரு அவர்களைக் கூட்டிக்கொண்டு ஊர் ஊராக யாத்திரை போவது வழக்கம்.

2. ஒரு நாள் அவர்கள் ஓர் ஊருக்குப் போனார்கள்; வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதில் முழங்காலளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. ஐந்து பேரும் ஆற்றைக் குறுகினார்கள். அப்போது குரு சீஷர்களைப் பார்த்து, 'சீஷர்களே! இந்த ஆறு மிகவுங் கொடியது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது விழித்திருக்கும்போது இறங்கினால், மனிதர்களை அப்படியே விழுங்கிவிடுமாம்; ஆதலால் தூங்குஞ் சமயம் பார்த்து, இதில் இறங்கவேண்டும்' என்றார்.

3. அதுகேட்ட மடையன், 'ஆமாம், ஆமாம், என் தகப்பனாரும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். இந்த நதியில் இடுப்பளவு வெள்ளம் போகும்பொழுது, என் தகப்பனார் ஒரு கழுதையின்மேல் உப்பு மூட்டை ஏற்றி ஓட்டிக்கொண்டு வந்தாராம். அவர் அந்தக் கரையிலிருந்து இந்தக் கரைக்கு வருவதற்குள், மூட்டையிலிருந்த உப்பு முழுவதையும் இந்த ஆறு தின்றுவிட்டதாம். மூட்டையைத் தைத்திருந்த தையல் சிறிதும் பிரியாமல் இருந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்-

களாம். அப்படிப்பட்ட தந்திரமுள்ள நதி இது; ஆகையால், இது தூங்கும்போதே நாம் இதில் இறங்க வேண்டும்' என்றான்.

4. உடனே மூடன், 'நான், இது தூங்குவதும், விழித்திருப்பதும் கண்டு பிடிக்கிறேன்' என்று சற்று அருகில் போனான். அங்கு ஒருவன் சுருட்டுப் பற்ற-



வைத்துக்கொண்டு போட்டுவிட்டுப்போன கொள்-ளிக்கட்டை ஒன்று கிடந்தது. மூடன் அதை எடுத்து, தூர நின்று, எட்டித் தண்ணீரில் தோய்த்-தான். அது சுர் என்று புகைந்தது. மூடன் அது

கண்டு துள்ளித் துடித்து ஓடி அப்புறம் விழுந்தான். மற்ற நால்வரும் பயந்து, அடங்கி யொடுங்கி அப்பால் சென்றனர்.

5. சிறிதுநேரஞ் சென்றபிறகு, குரு மடையனை அனுப்பினார். அவன் அச்சத்தோடு நடுங்கிக்கொண்டே ஆற்றை யடைந்து, அங்கிருந்த ஒரு குச்சியை



எடுத்து, தண்ணீரில் தோய்த்தான். அது கொள்ளிக் கட்டை யல்லாமையால், புகை உண்டாக வில்லை. அதைக்கண்ட மடையன் ஆநந்தமடைந்து, ஓடிவந்து, 'ஆறு நன்றாய்த் தூங்குகிறது; அதைக் கடக்க இதுவே

சமயம்; வாருங்கள் வாருங்கள்' என்றான். உடனே எல்லோரும் புறப்பட்டு, வெகு பயத்துடன், சிறிதும் சத்தம் உண்டாகாமல் நடந்து, ஆற்றைக் கடந்தார்கள்; அவர்கள் ஆற்றின் அக்கரையையடைந்தபிறகு, குரு சீஷர்களைப் பார்த்து, 'நாம் ஐந்துபேரும் சரியாக இருக்கிறோமா? எண்ணிப் பாருங்கள்' என்றார். உடனே மடையன் எண்ணிப் பார்த்தான். அவன் தன்னை விட்டு எண்ணினதனால், நான்கு பேரே கணக்குக்கு வந்தார்கள். பிறகு, மூடன் எண்ணினான், அவனும் தன்னைவிட்டு, நான்குபேரே கணக்கிட்டான். அதன்பின், முட்டாளும், மட்டியும் எண்ணினார்கள், அவர்களும் தங்களைக் கணக்கிடவில்லை. முடிவில் குருவே கணக்கிடப் புறப்பட்டார்; அவரும் தம்மை நினைத்தவரல்லர், யார் எண்ணியும் நான்கு பேரே கணக்கில் ஏற்பட்டார்கள்.

6. பிறகு, எல்லோரும் சேர்ந்து, தம்மில் ஒருவன் போய்விட்டானென்று தீர்மானித்து, அழ ஆரம்பித்தார்கள். அப்போது குரு, ஆற்றைப் பார்த்து, 'ஓ படுபாவி ஆறே! தூங்குவதுபோலிருந்து எங்களில் ஒருவனை விழுங்கிவிட்டாயே! இது உனக்குத் தருமமா!' என்று அழுதார். அப்பொழுது, ஒருவன் குதிரைமேல் ஏறிக்கொண்டு அந்த வழியே வந்தான். அவன், இவர்கள் அழுவதைக் கண்டு, இரக்கங்கொண்டு, என்னவென்று விசாரித்தான். அப்போது குரு, 'ஐயா! நாங்கள் ஐந்து பேர், இந்த ஆறு தூங்கும் சமயம் பார்த்து, அக்கரையிலிருந்து இக் கரைக்கு வந்தோம். அப்படி வந்தும், இந்த ஆறு எங்களில் ஒருவனை விழுங்கிவிட்டது. என்ன செய்வோம்!' என்று துக்கத்தோடு சொன்னார்.

7. அதைக் கேட்ட வழிப்போக்கன், இவர்கள் சுத்த மூடர்கள் என்பதை யுணர்ந்து, அக் குருவைப் பார்த்து, 'ஐயா, நான் சொல்லுகிறபடி கேட்டால், போன மனிதனை வரவழைத்துக் கொடுக்கிறேன்' என்றான். இவன் யாரோ மந்திரவாதி என்றுணர்ந்து, அவர்கள் அவன்சொல்படிநடக்கச்சம்மதித்தார்கள்.



8. வழிப்போக்கன் அவர்களை ஒரேவரிசையாக நிறுத்தி, 'நான் இப்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அடி கொடுக்கிறேன்; அடிபட்டவுடனே

ஒவ்வொருவரும் வரிசையாக இலக்கம் சொல்லிக்கொண்டு அப்புறம்போய் நிற்கவேண்டும்' என்றான். அதற்கும் அவர்கள் சம்மதித்த பிறகு, முதல் மனிதனை ஓங்கி ஓர் அடி அடித்தான். உடனே மட்டி, 'அப்பாடா ஒன்று' என்று ஓடி, அப்புறம் நின்றான். பிறகு, மடையன் அடிபட்டு, 'இரண்டு' என்று ஓடினான். அதன் பின்பு முட்டாள், 'மூன்று' என்று ஓடினான். மூடன், 'நான்கு' என்று ஓடினான். கடைசியாக வழிப்போக்கன் குருவை ஓங்கி ஓரடி கொடுத்தான். குரு, 'ஆஹா, நான்தான் 'ஐந்தாவது' என்று சொல்லி ஓடினார். பிறகு, வழிப்போக்கன் போய்விட்டான். உடனே அவர்கள் ஐவரும், 'போனவன் வந்தான்' என்று எண்ணி, வழிப்போக்கனைப் புகழ்ந்து பேசிக்கொண்டே போனார்கள்.

---

1. முட்டாளுக்கு முழங்காலில் புத்தி.
2. கூரையேறி குருவி பிடியாத குருக்கள்
   வானத்தைக் கீறி வழி காட்டுவாரா?
3. ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்.
4. நுனிமரத்திலேறி அடிமரத்தில் வெட்டினான்.
5. பாழ் ஊருக்கு நரியே ராஜா.

---

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனே மரம்.



## 24. குதிரைமுட்டை வாங்கினது

பரமானந்த குருவும், அவருடைய சிஷர்களும் நடந்து கொஞ்சதூரம் போனார்கள். போகும் வழியில் மடையன் குருவைப் பார்த்து, 'ஐயா! அந்த வழிப்போக்கர், ஆறு விழுங்கிவிட்ட ஒருவரை அழைத்துக் கொடுத்தார்; பின்னும் குதிரையேறி அச்சமில்லாமல் ஆற்றில் இறங்கிப் போனார். ஆறு தூங்குகிறதா, விழித்திருக்கிறதா என்றும் பார்க்கவில்லை. குதிரைமேல் ஏறிக்கொண்டு போனால், ஆறு அடங்கியிருக்கும்போல் காண்கிறது' என்றான். குரு, 'ஆமாம், ஆமாம், அப்படித்தான் தோன்றுகிறது' என்றார். அதைக் கேட்ட முட்டாள், 'அப்படியானால் நாமும் ஒரு குதிரை வாங்கிக் கொள்ளலாமே' என்று குருவுக்குச் சொன்னான்.

2. குரு, அப்படியே செய்யலாம்; ஒரு குதிரை என்ன விலை இருக்கும் என்று கேட்டார். 'ஓஹோ! குதிரை அதிக விலை இருக்கும். நானூறு, ஐந்நூறு ரூபாய் விலையாகும். குதிரைமுட்டை வாங்கி குட்டியிறக்கிக் கொள்வது உத்தமம்' என்றான் மூடன். மடையன், 'ஆமாம், முட்டை கொஞ்சம் விலைதான் இருக்கும்; கோழி நாலணாவானால், முட்டை ஒரு காலணா அல்லவா. அதுபோல் குதிரை ஐந்நூறானால், அதன் முட்டை ஒரு நூறுதான் இருக்கும்' என்றான். குரு நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு, மூடன், முட்டாள், மடையன் ஆகிய மூன்றுபேரும் குதிரைமுட்டை வாங்கிவர விரைவாகச் சென்றார்கள்.

3. மூவரும் நெடுந்தூரம் நடந்து போனார்கள். வழியில் ஒருவன் குறுக்கிட்டான். மூடன் அவனைப்

பார்த்து, 'ஐயா! குதிரைமுட்டை எங்கே அகப்படும்? தயவுசெய்து சொல்லும்' என்று கேட்டான். அந்த மனிதன் இவர்கள் மூடத்தனத்தை யுணர்ந்து, சமீபத்தில் ஒரு கொல்லையைக்காட்டி, 'அங்கே அகப்படும்; போய் விசாரியுங்கள்' என்று சொன்னான்.

4. மூவரும் அந்தக் கொல்லையண்டை போனார்கள். அங்கே கொல்லைக்காரன் பல பரங்கிக்காய்களை அறுத்துக் குவித்திருந்தான். அருகில் சில குதிரைகளும், குதிரைக் குட்டிகளும் மேய்ந்துகொண்டிருந்தன. அதைக்கண்ட சீஷர்கள், 'இதுதான் குதிரைமுட்டைபோல் காண்கிறது. முட்டைகளும் முட்டையிலிருந்து வந்த குட்டிகளும் வெகு அழகாக இருக்கின்றன' என்று தீர்மானித்தார்கள். பிறகு, மூவரும் கொல்லைக்காரனிடம் போய் 'ஐயா! எங்களுக்கு ஒரு குதிரைமுட்டை வேண்டும்; தயவுசெய்து இதில் ஒன்று கொடும்' என்று கேட்டார்கள். கொல்லைக்காரன் சிறித்து, 'இந்த முட்டைக்கு உங்களால் விலை கொடுக்க முடியாது, போங்கள்' என்றான். அப்போது மூடன், 'ஐயா! எங்களிடம் நூறு ரூபாய்தான் இருக்கிறது; தயவுசெய்து அதைப் பெற்றுக்கொண்டு, ஒரு முட்டை கொடுக்க வேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டான். கொல்லைக்காரன், நூறு ரூபாயைப் பெற்றுக்கொண்டு, ஒரு பெரிய பரங்கிக் காயை எடுத்துக் கொடுத்தான். அதை முட்டாள் வாங்கி, தலையின்மேல் வைத்துக்கொள்ள, மூவரும் வெகு சந்தோஷத்துடன் திரும்பினார்கள்.

5. அவர்கள் வரும் வழியில், கட்டுசாதம் சாப்பிட ஓர் இடத்தில் தங்கினார்கள். அப்போது, முட்-

டாள், 'இந்த முட்டையை எங்கே வைப்பது?' என்று கேட்டான். அதற்கு மட்டி, 'அதைக் கீழே வைக்கக்கூடாது; கல் பட்டால் நொறுங்கிப் போகும். ஆதலால், அதைப் பத்திரமாக வைக்கவேண்டும்' என்றான். மூவரும் நெடுநேரம் யோசித்து, முடிவில் அங்கே புதல் அடர்ந்திருந்த ஒரு மரத்தின் கிளைமேல் வைத்தார்கள். பிறகு, அம் மூவரும் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.



6. அப்போது பெருங் காற்றடித்து, பரங்கிக் காய் கீழே விழுந்து உடைந்தது. அந்தச் சத்தம் கேட்டு, அந்தப் புதலில் மறைந்திருந்த ஒரு முயல்

பயந்து ஓட ஆரம்பித்தது. அதை மூவரும் கண்டார்கள்; அதைப் பின் பற்றியும் ஓடினார்கள். பிடிக்க முடியவில்லை. 'ஐயையோ, குதிரைக் குட்டி ஓடிவிட்டதே!' என்று மிகவும் விசனத்துடன் திரும்பி, குருவினிடம் வந்தார்கள்.

7. சீஷர்கள் குருவின் முன்வந்து நடுங்கி நின்றார்கள். குரு சீஷரைப் பார்த்து, 'என்ன சங்கதி? குதிரை முட்டை எங்கே?' என்றார். சீஷர்கள் நடந்ததைச் சொன்னார்கள். குரு, 'ஆஹா அப்படியா, நீங்கள் பின்பற்றி ஓடியும் அந்தக் குட்டியைப் பிடிக்க முடியவில்லையா! குட்டியிலேயே இவ்வளவு வேகமானல், குதிரையாக வளர்ந்தால் எவ்வளவு வேகமாக ஓடுமோ! ஆகையால், அது ஒழிந்ததே நமக்கு நல்ல காலம்' என்றார். அதைக்கேட்டு, சீஷரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

கருதிய நூல் கல்லாதான் மூடனாகும்
கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்
ஒருதொழிலும் இல்லாதான் முகடியாகும்
ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனாகும்
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப்போலே
பேசாமல் இருப்பவனே பேயனாகும்
பரிவுசொல்லிப் பேசினவன் பசப்பனாகும்
பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே.

## 25. கெட்ட மனைவி கேடடைந்தது

ஒருவனுக்கு ஒரு மனைவி இருந்தாள். அவள் மிகவும் கெட்டவள்; எந்நேரமும் புருஷனோடு சண்டையிடுவாள்; அண்டை வீட்டுச் சண்டையை விலை கொடுத்தாவது வாங்குவாள். அவளைக் கண்டோர் அனைவரும் அஞ்சி நடுங்குவார்கள். சிலர், 'இவள் பெண்ணல்ல, பேயே பெண் உருவைக்கொண்டு பிறந்திருக்கிறது' என்று சொல்லுவார்கள்.



2. அவளுடைய துஷ்ட குணத்தை அவன் சிறிது காலம் பொறுத்துக் கொண்டான். பிறகு, அவனாலும் பொறுக்க முடியவில்லை. இவளோடு வாழ்வதைவிட உயிரைப் போக்கிக்கொள்வதே நலம் என்று தீர்மானித்தான். ஒரு நாள் அவன் மனந்

துணிந்து, 'பெண்ணே! உன்னோடு வாழ என்றால் முடியவில்லை. உன்னை நல்லவள் என்று சொல்லுகிறவர் ஊரில் ஒருவரும் இல்லை. நீ இப்படியே செய்தால், நான் ஏதேனும் குளம் குட்டையில் விழுந்து, என் உயிரை விட்டுவிடுவேன்' என்றான்.

மனைவி — 'ஆஹா, அப்படியா! நல்லது நீ எப்படி உயிரை விட்டுவிடுகிறாயோ, அதை நானும் பார்க்கவேண்டும், வா' என்றாள்.

புருஷன் — 'சந்தோஷமாகப் பார், என் பின்னே வா' என்றான்.

இருவரும் தமது தோட்டத்தில் இருந்த ஒரு குளத்தண்டை போனார்கள். புருஷன் அங்கே சற்று மயங்கி நின்றான். அப்போது,

மனைவி — 'ஏன் மயங்குகிறாய்? மனம் துணியவில்லையோ? நீ ஆண்பிள்ளை யல்லவா?' என்றாள்.

புருஷன் — 'பெண்ணே! நான் மயங்கவில்லை; எனக்கு நீந்தத் தெரியும்; விழுந்தால் நீந்தி வந்துவிடுவேன்; ஆகையால், நீ என் இரண்டு கைகளையும் இறுகக் கட்டிவிட்டு, தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்து, என்னை இந்தக் குளத்தில் தள்ளிவிடு' என்றான்.

3. மனைவி வெகு சந்தோஷத்தோடு புருஷனுடைய இரண்டு கைகளையும் பின்னால் சேர்த்து உறுதியான கயிற்றினால் கட்டிவிட்டாள். பிறகு, வெகு தூரம்போய் விரைவாக ஓடிவந்தாள். அவள் விரைவாக ஓடித் தனக்குச் சமீபத்தில் வரும்போது, புருஷன் திடீரென்று தாண்டி அப்பால் நின்றான். ஓடிவந்த வேகத்தினால் அவள் குப்புறக் குளத்தில்

விழுந்தாள். விழுந்து முழுகி முழுகி எழுவதைப் புருஷன் சந்தோஷமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டு கரையில் நின்றான். அப்போது,

மனைவி — 'அடா படுபாவி! ஓடிவந்து என்னை எடுக்காமல், குட்டிச் சுவரைப்போல் நிற்கிறாயே!' என்றாள்.

புருஷன் — 'பெண்ணே, என் இரண்டு கைகளையும் நீயே கட்டிவிட்டாயே, நான் எப்படி எடுப்பேன்! நீ இறந்துபோவதைக் கண்டு எனக்கு மிகவும் துக்கம் உண்டாகிறது' என்றான்.

அவள் முடிவில் தண்ணீரில் அழுந்தி இறந்தாள். புருஷன், 'விட்டது சனியன்' என்று வீட்டுக்கு வந்து, சுகமாக வாழ்ந்திருந்தான்.

---

1. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
2. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.
3. பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்.
4. கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை.
5. காவல்தானே பாவையர்க் கழகு.

---

6. அன்பான நெஞ்சமே அழகிய தோட்டம்
அன்பான எண்ணமே அதில்மரக் கூட்டம்
அன்பானவார்த்தையே அதன்பூவுங்காயும்
அன்பான செய்கையே அருங்கனியாகும்.

## 26. உபாயக் கள்ளன்

ஓர் ஊருக்குப் பிரயாணம் போன மாமூத் என்னும் மகம்மதியன் ஒரு குளக் கரையில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான். அப்பொழுது அவனுடைய சிநேகிதனாகிய ஆதம் என்பவன் அங்கே வந்தான். மாமூத், அவனோடு பேசினால், சாப்பிட அழைக்க வேண்டும் என்று எண்ணி, அவனைக் காணாதவன்போல் இருந்து விட்டான். ஆதம்



அதைத் தெரிந்துகொண்டு, அவனை ஏமாற்ற வேண்டும் என்று தீர்மானித்தான். பிறகு, ஆதம் தன் சிநேகனைப் பார்த்து, 'நீர் ஊரைவிட்டு எத்தனை நாளாகிறது?' என்றான். மாமூத், 'ஒரு மாதம் ஆகிறது' என்று சொல்லிப் பேசாமல் இருந்தான். அதற்குள் அங்கே ஒரு நாய் வந்தது.

ஆதம் — 'ஐயா! இந்த நாய், மூந்தாநாள் இறந்துவிட்ட உம்முடைய நாயைப் போலவே இருக்கிறது' என்றான்.

மாமூத் — 'ஐயோ! என் நாய் எப்படி இறந்துவிட்டது?' என்றான்.

ஆதம்—'உமது ஒட்டகம் இறந்துவிட்டது. அதன் மாமிசத்தை அமிதமாகத் தின்றதனால், அந்த நாய் இறந்துவிட்டது' என்றான்.

மாமூத் — 'இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது! ஒட்டகம் எப்படி இறந்தது?' என்றான்.

ஆதம் — 'உமது மனைவி இறந்துவிட்ட பிறகு, அதைப் பாதுகாப்பவர் இல்லாமையால், ஒட்டகம் இறந்துவிட்டது' என்றான்.

மாமூத் — 'ஐயையோ! என் மனைவி எப்படி இறந்து விட்டாள்?' என்றான்.

ஆதம் — 'உமது பிள்ளை இறந்த சோகத்தினால், உமது மனைவியும் இறந்தாள்' என்றான்.

மாமூத் — 'என்ன அநியாயம்! என் பிள்ளை எப்படி இறந்தான்?' என்றான்.

ஆதம் — 'வீடு இடிந்து விழுந்து, உமது பிள்ளை இறந்தான்' என்றான்.

2. மாமூத் இதைக் கேட்டு, 'என் குடியே பாழாயிற்றே!' என்று கூவி அழுதுகொண்டே எழுந்து வீட்டை நோக்கி ஓடினான்.

3. ஆதம் அவன் விட்டுப்போன கட்டுசாதத்தை உண்டு பசி தீர்ந்தான். மாமூத் ஆவலோடு வீட்டைச் சேர்ந்து, யாவரும் சுகமாக இருக்கக் கண்டு, சந்தோஷமடைந்தான். பிறகு, ஆதம் என்பவன் தன் சாதத்தை அபகரிக்கவே இந்தத் தந்திரம் செய்தான் என்று தெரிந்துகொண்டான்.

## 27. இருசொல் அலங்காரம்

1. ஆலிலை பழுப்பதேன்?
இராவழி நடப்பதேன்?

பறிப்பாரற்று.

2. ஆட்டுக்கறி கசப்பதேன்?
ஆண்டி பட்டினி யிருப்பதேன்?

பிச்சையெடாமல்.

3. எருக்கிலை பழுப்பதேன்?
எருமைக் கன்று சாவதேன்?

பாலற்று.

4. காவென்று கோவென்று ஆவதேன்?
காளை யெருது பாய்வதேன்?

கொம்பையிட்டு.

5. கீரை விதைப்பதேன்?
கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?

பிடுங்கித்தின்ன.

6. கூட்டக் கோனாய் ஓடுவதேன்?
கூத்தாடிக்குப் பொன் கொடுப்பதேன்?

ஆட்டைப்பார்த்து.

7. சிறியவூர் பட்டணமாவதேன்?
வெறியர் மயங்கித் திரிவதேன்?

குடியேறி.

8. திங்கள் வருவதேன்?
திருவிளக்கு ஏற்றுவதேன்?

ஞாயிறுபோய்.

# அதிவீர ராம பாண்டியர்

அருளிச் செய்த

# வெற்றிவேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
8. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
9. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
11. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
12. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
13. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
14. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
15. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

16. உற்ருே ரெல்லாம் உறவின ரல்லர்.
17. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்ருது.
18. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
19. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அருது.
20. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
21. கலக்கினுந் தண்கடல் சேரு காதே.
22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
23. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
24. பெருமையும் சிறுமையும் தான்றர வருமே
25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.
27. கற்கை நன்றே கற்கை நன்றே.
28. பிச்சை புகினுங் கற்கை நன்றே.
29. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
30. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றிலனாயின் கீழிருப் பவனே.
31. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்ருேரை வருக வென்பார்.
32. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.
33. யானைக் கில்லை தானமும் தருமமும்.
34. பூனைக் கில்லை தவமும் தயையும்.
35. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
36. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்
37. முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.

38. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
39. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
40. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.
41. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
42. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
43. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
44. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
45. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினும் அழிவர்.
46. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்.
47. மணவணி யணிந்த மகளி ராங்கே,
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
48. பெற்றமுங் கழுதையும் மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
49. இல்லோ ரிரப்பதும் இயல்பே யியல்பே.
50. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.
51. நறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
52. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே.
53. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றோர் குறவர் தேயம் நன்றே.

54. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை யிறைவனும் மூர்க்கனும் பதரே.

55. முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

56. வித்து மேரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

57. தன்னா யுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

58. வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

59. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

60. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

61. இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா னாயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகினின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

62. பழியா வருவதூஉம் மொழியா தொழிவது.

63. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

64. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

65. வழியே யேகுக வழியே மீளுக.

# போதனை முறைக் குறிப்புகள்

தொடர் முறைப் போதனைக்கு (Correlative methods of Teaching) அநுகூலமாக எழுதப்பட்ட இவ்வாசக புஸ்தகங்களில் பெரும்பாலன, நமது நாட்டில் வழங்கும் சாதாரணக் கதைகளேயாம். அக் கதைகள், பாடசாலைகளில் நடத்த வேண்டிய பல் வேறு பாடங்களையும் சம்பந்தப் படுத்திப் போதிக்க வழியுண்டாகும்படி தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

வாய்மொழிப் பாடம் — முதலில் எந்தப் பாடத்தையும், அப் பாடத்தில் உள்ள படங்களின் மூலமாய் வாய் மொழிப் பாடமாக நடத்தவேண்டும். அதனால், அப் பாடத்தைப் படிக்கவேண்டும் என்னும் விருப்பம் சிறுவர் மனத்தில் தோன்றுவது மன்றி, அப் பாடத்தில் வரும் நூதன பதங்கள் சரியான உச்சரிப்போடு வாயில் வழங்கவும் பெறும். பின்னர், அப் பதங்களை வரிவடிவான எழுத்துக்களுடன் காண்ப தொன்றே சிறுவர்களுடைய செய்கையாக இருக்கும். இவ்வகையான போதனையினால், சிறுவர்கள், சொற்றொடர்களைச் சேர்த்து உச்சரிக்கையில் நிறுத்த வேண்டிய இடங்களையும் உணர்தற்கு வழியுண்டாம். அன்றி, சம்பாஷணைக் கிரமமும் சொற்றொடராக்கத் திறமையும் ஏற்படும்.

2. இப் புத்தகத்துள் வந்துள்ள பாடங்களிற் பெரும்பாலன சம்பாஷணைக் கிரமத்தில் இயன்றிருக்கின்றன. அப் பாடங்களைப் பிள்ளைகளைக் கொண்டு நடத்துகையில் அந்தந்த வாக்கியங்களின் ஈற்றில் உள்ள, 'என்று கேட்டது' 'என்று சொல்லிற்று' 'என்றான்' 'என்றாள்' என்பவை போன்ற சில சொற்களை நீக்கவேண்டிவரும். உபாத்தியாயர்கள் அத்தகைய இடங்களில் ஏற்றவாறு மாற்றிக் கொள்ளலாகும்.

3. சில பாடங்களில் சம்பாஷணைக் கிரமத்தில் இசைப் பாட்டுக்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அப் பாடல்கள் எளிய சொற்களில், கடின சந்திகளில்லாமல், மிகச் சாதாரண

ராகத்தில் இயன்றிருப்பதனால், பிள்ளைகள், அதிக உற்சாகத்துடன் படிக்கவும், மனப்பாடம் செய்யவும் அவை ஏற்றவையாகும். வாசக பாடம் நடத்துகையில், அந்த இசைப்பாட்டுக்களையும் வாசக நடையாக வாசிக்கச் செய்யலாம்.

4. கடவுள், நீதிக் கும்மி, மாதா பிதா, வெண்ணிலா, நாய் முதலிய சில பாடல்கள் முழுதும் இசைப் பாட்டாகவே இயன்றுள்ளன. அவற்றையே செய்யுட் பாடமாகக் கொள்ளுதலும் கூடும்.

5. இசைப் பாட்டுக்கள் அமைக்காமல் விட்ட சில பாடங்களுக்கு உபாத்தியாயர்கள், தம் ஊக்கங் குன்றாமல் அவற்றிற்கேற்ற சில பாடல்களைச் சொந்தமாக அமைத்துக் கொள்வார்களாக. இது கருதியே, அவை அவ்வாறு வெறும் வாசகங்களாக விடப்பட்டன.

6. **சொற்றொடர் ராக்கம்** — இப்பாடம் கீழ் வகுப்புக்களில் போதிக்கப்படுவதில்லை. அது சரியன்று. 'வகுப்பிற்குத் தக்கபடி, எந்தப் பாடத்தையும் சிறிது சிறிதாகக் கற்பிக்க வேண்டும்' என்னும் சிறந்த முறையை உபாத்தியாயர்கள் உய்த்துணர்வாராக. அது நோக்கியே, இப் புத்தகத்துள் சேர்ந்த இடங்களில் அப் பாடத்தில் வரக்கூடிய நீதிகளும் பழமொழிகளும் பெரியோர் வாக்கியங்களும் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறே ஒவ்வொரு பாடத்திற்கும் அமைப்பதாயின், புத்தகம் அளவில் பெருகும் என்றஞ்சி விடுத்தனம். காட்டிய குறிப்புக்களைக் கொண்டு, மற்ற இடங்களிலும் ஏற்றவாறு, அப்பியாசங்களை உபாத்தியாயர்கள் அமைத்துக்கொள்வார்களாக.

7. இடை யிடையே இசைப் பாட்டுக்கள் விரவியுள்ள பாடங்களைப் பிள்ளைகளைக் கொண்டு நாடகமாகவும் நடத்திக் காட்டலாம். அது நோக்கியே அந்தப் பாட்டுக்களுக்கான இராக தாளங்கள் சுரங்களுடன் மறுபக்கத்திற் குறிக்கப்பட்டன.

## பாட்டுகளுக்குச் சுரங்கள்

[புள்ளி யில்லாதவை மத்திய ஸ்தாயியையும், மேற்புள்ளி யுள்ளவை எச்சு ஸ்தாயியையும், கீழ்ப் புள்ளி யுள்ளவை மந்தர ஸ்தாயியையும் குறிக்கும்.]

### பாடம் — 5.

### நீதிக் கும்மி

கும்மிப் பாடல் மெட்டு

### பாடம் — 7.

### குரங்கும், முதலையும்

சா.ச சாசா ரீமா பாதப பதசா நிதபம மபதா பா
பா.த சாபா சாகரி சாரீ கபமக ரிசகிக ரிசசா சா

### பாடம் — 9.

### பிறவிக் குருடர்கள்

குருடர் —

காரி சாரி காம மாக மாப மகரி கா
சாரீ ரீபா மாபம கரிசா ரிகமா கரிகரி சா

பாகன் —

பாப பாத சாநி தநித பதப மாக மா
சாரீ ரீபா மாபம கரிசா ரிகமா கரிகரி சா

### பாடம் — 10.

ஆநந்தக்களிப்பு மெட்டு

## பாடம் — 14.

### வெண்ணிலா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சா.ச | சாசா | நீதா | பாபம | பதநீ | தாபா | காம | ரீரீ |
| ரீகச | மா.பா | மாகா | ரீசரி | ரிகமா | கரிகரி | சா | சா |

## பாடம் — 16.

### நாய்

நீசரீக மக கரிசா - பமகரிச

சரணங்கள்

| | | |
|---|---|---|
| கமபம | கமகரி | கமபா - கக |
| கமபகா | கமரி | கமபா - கக |
| சமபம | கமகரி | கமபா - கக |
| சககா | கமக | ரிகமக - ரிச |

173459

## பாடம் — 20.

### பிள்ளை வழக்கு

(அதுவே சரி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கம | பாபப | மம | நீதப | மக | மாகரி | ரிசரீ |
| ரிரி | ரீபப | மக | மாக்ரி | ரிக | மாகரி | கரிசா |

## பாடம் — 22.

1. வெண்காயச் செடி. 2. பலாப்பழம். 3. குடாக்குப் புகை. 4. வண்ணான். 5. தேங்காய். 6. பூசணிக்காய்.

Printed at the 'Caxton Press,' Madras. E.—

ஸ் ... லலன்ஸ்

## சொற்றொடர் ஆக்கம்
## (COMPOSITION IN TAMIL)

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| தல் புத்தகம் ... ... ... | 0 | 1 | 6 |
| ரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 2 | 6 |
| ன்றும் புத்தகம் ... ... ... | 0 | 5 | 0 |

### மூன்றும் வகுப்புப் பூகோளங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னபட்டணம் ஜில்லா ... ... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு ஜில்லா ... ... ... | 0 | 4 | 0 |
| தென் ஆற்காடு ஜில்லா ... ... | 0 | 4 | |
| கோயமுத்தூர் ஜில்லா ... ... | 0 | 4 | 0 |
| தஞ்சாவூர் ஜில்லா ... ... ... | 0 | 4 | 0 |
| மதுரை ஜில்லா ... ... ... | 0 | 4 | 0 |
| இராமநாதபுரம் ஜில்லா ... ... | 0 | 4 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா ... ... | 0 | 4 | 0 |
| சேலம் ஜில்லா ... ... ... | 0 | 4 | 0 |
| வட ஆற்காடு ஜில்லா ... ... ... | 0 | 4 | 0 |

### வாசக பாடத் திரட்டு

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |

### இலக்கணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சிற்றிலக்கண வினு விடை — I-4 ஆம் வகுப்பு | 0 | 1 | 6 |
| சிற்றிலக்கணம் — II-முதல் பாரத்திற்கு ... | 0 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| இயற்கை பொருட் கதைகள் ... ... | 0 | 8 | 0 |
| தூரதேசத்துச் சிறுவர்கள் ... ... | 0 | 6 | 0 |
| கட்டுரைத் தொகுதி ... ... ... | 0 | 8 | |